# கோபிசெட்டிபாளையம் நகராட்சி
# 30.06.2022 ம் தேதி நடைபெற்ற சாதாரணக்கூட்ட நடவடிக்கைகள்
# தீர்மான நகல்

1. **30.05.2022 ஆம் தேதியில் நடைபெற்ற சாதாரண கூட்டத்தில் ஒத்திவைக்கப்பட்ட தீர்மானம் எண்.135**

கோபிசெட்டிபாளையம் நகராட்சி எல்லைக்குட்பட்ட வீரபாண்டி கிராமம் வார்டு D பிளாக் 20, நகரளவை எண்.32, சர்வே எண்.248/Bpt, 249/Apt இல் உள்ள 10,000 ச.மீ (2.475 ஏக்கர்) காலியிடத்தினை முழுமைத்திட்டத்தில் விவசாய பகுதியாக உள்ளதை குடியிருப்பு பகுதியாக மாற்றம் செய்து தருமாறு 20.04.2022 ஆம் நாளிட்ட திரு.K.பொன்னுசாமி மற்றும் திருமதி.ராஜம்மாள் ஆகியோரால் கோரப்பட்டுள்ளது.

இந்நகராட்சியில் 24.11.1982 ஆம் ஆண்டு அங்கீகரிக்கப்பட்ட மாற்றம் செய்யும் பொருட்டு அரசு ஆணை எண்.485 நாள்.04.06.1990 இல் வீட்டுவசதி வாரிய துறையால் தமிழ்நாடு நகர் ஊரமைப்பு சட்டம் 1971 பிரிவு 32(3) (15) மற்றும் பிரிவுகள் 32 (2c) இன் படி திருத்திய முழுமைத் திட்டம் 2011 (Modified Master Plan Land Use 2011) 1992, ஆம் ஆண்டு இறுதி ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

மேற்காணும் பகுதியில் உள்ள வார்டு D பிளாக் 20 நகரளவை எண்.32 நகராட்சி வார்டு எண். 18 கரட்டூர் பாரதிவித்யாலயா பள்ளி அருகில் 10,000 ச.மீ (2.475 ஏக்கர்) இடமானது அங்கீகரிக்கப்பட்ட விரிவு அபிவிருத்தி திட்டம் எண்.7 இன் படியும் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட திட்டத்தின் படியும் விவசாய பகுதி (Agriculture) வகைப்படுத்தப்பட்டுள்ளது. மனையிடத்திற்கு அனுகுபாதை 15.20 மீ அகலமுள்ள சாலை உள்ளது மனையிடத்தின் வடபுறம் சாலையும், தென்புறத்தில் பச்சைமலை சேரன் நகர் எனும் பெயரில் குடியிருப்பு பகுதியும் கிழபுறம் மானாவாரி நிலங்களும் மேற்குபுறத்தில் விவசாயம் அல்லாத பூமியாகவும் அமைந்துள்ளது.

மனையிடத்தினை சுற்றியும் வரையறுக்கப்படட தூரத்திற்குள், ஆறு, ஏரி, குளம் மற்றும் குட்டை போன்ற நீர்நிலைகள் ஏதும் அமையவில்லை மேலும் சுடுகாடு, இடுகாடு ஆகியவைகள் அமையப்பெறவில்லை எனவே மேற்காணும் விவரங்களின் அடிப்படையில் மனுதாரருக்கு சொந்தமான 10.000 ச.மீ (2.475 ஏக்கர்) நிலத்தினை விவசாய உபயோகத்திலிருந்து குடியிருப்பு உபயோகப்பகுதியாக நில உபயோக மாற்றம் செய்து தர மாவட்ட நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் ஈரோடு, மற்றும் நகர் ஊரமைப்பு இயக்குநர் சென்னை வழியாக தமிழ்நாடு வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை அரசுச் செயலர், சென்னை அவர்களுக்கு கருத்துரு அனுப்ப மன்றத்தின் அனுமதிக்காக வைக்கப்படுகிறது. (ந.க.எண்.847/2022/எப்1)

**அலுவலகக்குறிப்பு** : மன்றம் அனுமதிக்கலாம்
**அனுமதிக்கப்பட்டது மன்றத்தீர்மான எண். 141**

2. இந்நகராட்சி ஆணையாளர் அவர்களின் மே **2022**–ம் மாதத்திற்கான நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது (க.எண்.1464/2016/சி1)

**அலுவலகக்குறிப்பு** : மன்றம் பதிவு செய்யலாம் .
**பதிவு செய்யப்பட்டது மன்றத்தீர்மான எண். 142**

3. இந்நகராட்சி பொறியாளர் அவர்களின் மே **2022**–ம் மாதத்திற்கான நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது (க.எண்.1464/2016/சி1)

**அலுவலகக்குறிப்பு** : மன்றம் பதிவு செய்யலாம் .
**பதிவு செய்யப்பட்டது மன்றத்தீர்மான எண். 143**

4.  இந்நகராட்சி துப்புரவு அலுவலர் அவர்களின்  மே **2022–**ம் மாதத்திற்கான நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது (க.எண்.1464/2016/சி1)

**அலுவலகக்குறிப்பு :** மன்றம் பதிவு செய்யலாம்

**பதிவு செய்யப்பட்டது மன்றத்தீர்மான எண். 144**

5.  இந்நகராட்சி நகரமைப்பு அலுவலர் அவர்களின்  மே **2022–**ம் மாதத்திற்கான நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது (க.எண்.1464/2016/சி1)

**அலுவலகக்குறிப்பு :** மன்றம் பதிவு செய்யலாம் .

**பதிவு செய்யப்பட்டது மன்றத்தீர்மான எண். 145**

6.  நகராட்சிக்கு சொந்தமான கீழ்க்கண்ட 27 கடைகளுக்கு 27.05.2022ந் தேதியன்று பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது.

1. புதியாஸ்பத்திரி வீதி கடை எண். 7 மற்றும் 8.
2. பழைய பேருந்து நிலைய MUDF கடை எண். 33, 34, 42, 43, 53, 55, 57, 58, 59, 60, 61, 66, 67, 69, 70, 71, 72, 73, 74
3. பழைய பேருந்து நிலைய MUDF கடை எண். 56, 45
4. வாரச்சந்தை கடை எண்.2 மற்றும் 31
5. பழைய பேருந்து நிலையம் MUDF கடை எண். 54
6. பழைய பேருந்து நிலையம் MUDF கடை எண். 47

மேற்கண்ட கடைகளுக்கு நடைபெற்ற பொது ஏலத்தில் ஒருவரும் கலந்துகொள்ளவில்லை. இரண்டு கடைகளுக்கு மட்டும் கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளது.

| வ. எண் | குத்தகை இனங்கள் | ஒப்பந்தப்புள்ளி அளித்தவர்கள் பெயர் | குழு பரிந்துரை செய்த மாத வாடகை ரூ.. | ஒப்பந்தப்புள்ளியில் குறிப்பிட்ட மாத வாடகை ரூ. | ஏலக் கேள்வி |
|---|---|---|---|---|---|
| [1] | [2] | [3] | [4] | [5] | [6] |
| 1 | பழைய பேருந்து நிலைய MUDF கடை எண். 53 | திரு.கோ.ம.குணசேகரன் த/பெ. மயில்சாமி, 23, வாய்க்கால் வீதி, கோபிசெட்டிபாளையம், 97887 08885 | ரூ.1,500/– | ரூ.1,523/– | இல்லை |
| | | திருமதி.ஜே.கணணகி, 50, இராமர் இல்லம், ஜோதிநகர் எக்ஸ்டன்ஷன், கோபி 638476 | ரூ.1,500/– | **ரூ.1,600/–** | |
| 2 | வாரச்சந்தை IUDP கடை எண். 2 | திருமதி.எஸ்.இராஜேஸ்வரி க/பெ. சம்பத்குமார், 7/1, பஜனைக்கோயில் வீதி, அண்ணா நகர், மொடச்சூர், கோபி | ரூ.2,100/– | **ரூ.3,200/–** | இல்லை |
| | | திருமதி.டி.ஜெயபாக்கியம், க/பெ. தங்கவேல், 7/1, பஜனைக்கோயில் வீதி, அண்ணா நகர், மொடச்சூர், கோபி | ரூ.2,100/– | ரூ.2,600/– | |
| | | திருமதி.அஸ்ரப்நிஷா, 34, நஞ்சப்பா வீதி, கோபி, 98652 59915 | ரூ.2,100/– | ரூ.2,800/– | |

மேற்கண்டவாறு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில்

1. வரிசை எண். 1. பழைய பேருந்து நிலைய MUDF கடை எண். 53 – க்கு திரு.கோ.ம.குணசேகரன் என்பவரது ஒப்பந்தப்புள்ளியை விட கூடுதலாகவும், குழு நிர்ணயித்த வாடகை ரூ.1,500/– ஐ விட கூடுதலாக ரூ.100/– சேர்த்து திருமதி.ஜே.கண்ணகி என்பவர் **ரூ.1,600/– க்கு** உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ளார்.

2. வரிசை எண். 2. வாரச்சந்தை IUDP கடை எண். 2 – க்கு திருமதி.டி.ஜெயபாக்கியம் என்பவரது ஒப்பந்தப்புள்ளி ரூ.2,600/– மற்றும் திருமதி.அஸ்ரப்நிஷா என்பவரது ஒப்பந்தப்புள்ளி ரூ.2,800/– ஆகியவற்றைவிட கூடுதலாகவும், குழு நிர்ணயித்த வாடகை ரூ.2,100/– ஐ விட கூடுதலாக ரூ.1,100/– சேர்த்து திருமதி.எஸ்.ராஜேஸ்வரி க/பெ. சம்பத்குமார் என்பவர் **ரூ.3,200/–** க்கு உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ளார்.

எனவே வரிசை எண். 1. பழைய பேருந்து நிலைய MUDF கடை எண். 53 மற்றும் வரிசை எண். 2. வாரச்சந்தை IUDP கடை எண். 2 ஆகியவற்றிற்கு அளிக்கப்பட்டுள்ள உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளிகளை ஏற்பது குறித்து மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

3. ஏலம் போகாத மற்ற கடைகளுக்கு மறு பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரலாம் (ந.க.எண். 301/2021/அ3)

**அலுவலக குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.
**வரிசை எண்.1 கலம் 2க்கு கலம் 3இல் காணும் கே.கண்ணகியின் உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளி ஏற்றுக்கொள்ளப்பட்டது.**
**வரிசை எண்.2 கலம் 3ல் காணும் S.ராஜேஸ்வரியின் உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளி ஏற்றுக்கொள்ளப்பட்டது.**
**ஏலம் போகாத மற்ற கடைகளுக்கு மறுபொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோர அனுமதிக்கப்பட்டது.**
**மன்றத்தீர்மான எண்.146**

7. கோபிசெட்டிபாளையம் நகராட்சிக்கு சொந்தமான பேருந்து நிலையத்தில் நுழையும் பேருந்துகளுக்கு கட்டணம் வசூல் செய்யும் பணி மற்றும் பேருந்து நிலையத்தில் உள்ள நவீன கட்டண கழிப்பிடத்தில் கட்டணம் வசூல் செய்யும் பணி ஆகியன இவ்வலுவலகத்துறை மூலம் வசூலிக்கப்பட்டுவருகிறது. மேற்படி கட்டண வசூல் பணிக்கு கட்டண சீட்டுகள் தீர்ந்து விட்டபடியால், கட்டண சீட்டுகள் அச்சடித்து வழங்குவதற்கு 07.05.2022 ந் தேதியில் விலைப்புள்ளிகள் கோரப்பட்டதின்படி வரப்பெற்றுள்ள விலைப்புள்ளிகள் மன்றத்தின் ஒப்பு நோக்கு பட்டியல் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | விலைப்புள்ளி அளித்தவர் விபரம் | கட்டண சீட்டு விபரம் | கட்டண சீட்டு எண்ணிக்கை | விலைப்புள்ளி கோரிய தொகை |
|---|---|---|---|---|
| 1 | பி.எஸ்.பெரியசாமி, ஸ்ரீ பாலாஜி ஆப்செட் பிரிண்டர்ஸ், 7/4, சத்தி மெயின் ரோடு, கோபி | பேருந்து நிலைய நுழைவு கட்டணம் | 50001 முதல் 80000 வரை | **ரூ.7,000/–** |
| 2 | விநாயகா பிரிண்டர்ஸ், 4, மெயின் ரோடு, கோபி | பேருந்து நிலைய நுழைவு கட்டணம் | 50001 முதல் 80000 வரை | ரூ.8,300/– |
| 3 | கௌதம் பிரிண்டர்ஸ், 220, மொடச்சூர் மெயின் ரோடு, கோபி | பேருந்து நிலைய நுழைவு கட்டணம் | 50001 முதல் 80000 வரை | ரூ.8,300/– |
| 4 | பி.எஸ்.பெரியசாமி, ஸ்ரீ பாலாஜி ஆப்செட் பிரிண்டர்ஸ், 7/4, சத்தி மெயின் ரோடு, கோபி | சிறுநீர் கழிக்க | 20001 முதல் 60000 வரை | **ரூ.8,900/–** |
| 5 | விநாயகா பிரிண்டர்ஸ், 4, மெயின் ரோடு, கோபி | சிறுநீர் கழிக்க | 20001 முதல் 60000 வரை | ரூ.10,100/– |

| | | | | |
|---|---|---|---|---|
| 6 | கௌதம் பிரிண்டர்ஸ், 220, மொடச்சூர் மெயின் ரோடு, கோபி | சிறுநீர் கழிக்க | 20001 முதல் 60000 வரை | ரூ.9,500/- |
| 7 | பி.எஸ்.பெரியசாமி, ஸ்ரீ பாலாஜி ஆப்செட் பிரிண்டர்ஸ், 7/4, சத்தி மெயின் ரோடு, கோபி | மலம் கழிக்க | 20001 முதல் 60000 வரை | **ரூ.8,900/-** |
| 8 | விநாயகா பிரிண்டர்ஸ், 4, மெயின் ரோடு, கோபி | மலம் கழிக்க | 20001 முதல் 60000 வரை | ரூ.10,100/- |
| 9 | கௌதம் பிரிண்டர்ஸ், 220, மொடச்சூர் மெயின் ரோடு, கோபி | மலம் கழிக்க | 20001 முதல் 60000 வரை | ரூ.9,500/- |

மேற்கண்ட விபரப்படி வரப்பெற்றுள்ள விலைப்புள்ளிகளில், வரிசை எண். 1, 4 மற்றும் 7 ல் கண்டுள்ள பி.எஸ்.பெரியாசமி, ஸ்ரீபாலாஜி ஆப்செட் பிரிண்டர்ஸ், 7/4, சத்தி மெயின்ரோடு, கோபி அவர்கள் அளித்துள்ள குறைந்தபட்ச விலைப்புள்ளியை ஏற்பது குறித்து மன்றத்தின் முடிவிற்கு மன்றப்பொருள் வைக்கப்படுகிறது. (ந.க.எண். 1220/2021/அ3)

**அலுவலக குறிப்பு :** மன்றம் முடிவு செய்யலாம்.

**வரிசை எண்.1,4, மற்றும் 7ல் கண்டுள்ள படி பி.எஸ்.பெரியசாமி ஸ்ரீ பாலாஜி ஆப்செட் பிரிண்டர்ஸ் –ன் குறைந்த விலைப்புள்ளி ஏற்றுக்கொள்ளப்பட்டது. மன்றத்தீர்மான எண்.147**

8. நகராட்சிக்கு சொந்தமான கீழ்க்கண்ட ஆண்டு குத்தகை இனங்களுக்கு 27.05.2022 ஆம் தேதியன்று பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது.

1. நகராட்சி பேருந்து நிலையத்தில் பேருந்துகளுக்கு கட்டணம் வசூலிக்கும் உரிமம்.
2. புதிய பேருந்து நிலைய நவீன கட்டண கழிப்பிடத்தில் கட்டணம் வசூலிக்கும் உரிமம்.
3. நகராட்சி தலைமை குடிநீர் நிலைய மரங்களின் பலன்களை அனுபவிக்கும் உரிமம்.
4. நகராட்சி பேருந்து நிலையத்தில் ஒலி, ஒளி அமைத்து விளம்பரம் செய்யும் உரிமம்.

மேற்கண்ட ஆண்டு குத்தகை இனங்களுக்கு நடைபெற்ற பொது ஏலத்தில் ஒருவரும் கலந்துகொள்ளவில்லை. கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் மட்டும் பெறப்பட்டுள்ளது.

| வ. எண் | ஆண்டு குத்தகை இனங்கள் | ஒப்பந்தப்புள்ளி அளித்தவர்கள் பெயர் | ஒப்பந்தப்புள்ளியில் குறிப்பிட்ட ஆண்டு குத்தகை தொகை ரூ. | ஏலக் கேள்வி |
|---|---|---|---|---|
| [1] | [2] | [3] | | [5] |
| 1 | புதிய பேருந்து நிலையத்தில் உள்ள நவீன கட்டண கழிப்பிடத்தில் கட்டணம் வசூல் செய்யும் உரிமம். | திருமதி.வி.மகாலட்சுமி க/பெ. வெங்கடேஸ்வரன், 22, சௌடாம்பிகை கோயில் வீதி, பங்களா மேடு, மேட்டுப்பாளைம், கோவை மாவட்டம் | **ரூ.5,00,900/-** | இல்லை |
| | | திரு.வி.சுப்ரமணியன், த/பெ. வையாபுரி நாடார், 16சி. எருமைக்கார தெரு, திண்டுக்கல் | ரூ.4,75,000/. | |

மேற்கண்ட விபரப்படி வரிசை எண்.1ல் கண்டுள்ள ஆண்டு குத்தகை இனத்திற்கு திருமதி என்பவர் அளித்துள்ள உயர்ந்தபட்ச ஒப்பந்ததொகை ரூ.5,00,900/- சென்ற 2020- 2021 ம் ஆண்டு குத்தகை தொகை ரூ.7,35,735/- ஐ விடவும், மூன்றாண்டு சராசரி குத்தகை தொகை ரூ.7,25,478/- ஐ விடவும் குறைவாக உள்ளது. இந்த குத்தகை இனத்திற்கு இதுவரை 10 முறை ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரியும் ஒருவரும் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளியில் கலந்துகொள்ளவில்லை. 17.06.2021 ந் தேதி முதல் துறை மூலம் வசூல் செய்யப்பட்டு வருகிறது.

இவ்வினத்திற்கு துறை மூலம் வசூல் செய்யப்பட்டதில் 17.06.2021 முதல் 31.05.2022 வரை ஒரு மாதத்திற்கு சராசரியாக ரூ45,000/- வசூல் செய்யப்பட்டு உள்ளது. ஆண்டு குத்தகையாக துறை மூலம் வசூல் செய்வதால், ஆண்டு சராசரி குத்தகை தொகையாக ரூ.5,40,000/- வசூல் ஆகும் நிலை உள்ளது.

இவ்வினத்திற்கு ஒரு வருடத்திற்கு துறை மூலம் வசூல் செய்வதற்கு நகராட்சி பணியாளர் செலவினம் ரூ.2,52,000/-, மின் கட்டணம் ரூ.48,000/- வருமான வரி மற்றும் கட்டண சீட்டு அச்சடிக்க ஆகும் செலவினம் ரூ.60,000/- சேர்த்து மொத்தம் ரூ.3,60,000/- செலவு ஏற்படுகிறது.

மேற்கண்டவாறு துறை மூலம் வசூல் செய்யப்படும் மொத்த சராசரி குத்தகை தொகை ரூ.5,40,000/- ல், நிர்வாக செலவினங்கள், பணியாளர் செலவினம் மற்றும் இதர செலவினங்களை சேர்த்து ரூ.3,60,000/- கழித்தது போக நகராட்சி நிகர குத்தகை ரூ.1,80,000/- உரிமத் தொகையாக உள்ளது.

எனவே மேற்படி குத்தகை இனம் துறை மூலம் வசூல் செய்யப்படுவதால் நகராட்சிக்கு நிதி இழப்பினை கருத்தில் கொண்டு பதினொன்றாவது முறையாக 27.05.2022 ந் தேதியில் நடைபெற்ற ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளியில், திருமதி.வி.மகாலட்சுமி என்பவர் அளித்துள்ள உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளி ரூ.5,00,900/- ஐ (ரூபாய். ஐந்து லட்சத்து தொள்ளாயிரம் மட்டும்) ஏற்றுக்கொள்ளவும், மேற்படி குத்தகை வசூல் செய்யும் உரிமத்தினை அன்னாருக்கு ஒப்படைக்கும் நாள் மூன்று ஆண்டுகளுக்கு வழங்கவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண். 3225/2018/அ3)

**அலுவலக குறிப்பு :** மன்றம் அனுமதி வழங்கலாம்.

**நகராட்சிக்கு ஏற்படும் இழப்பினை கருத்தில் கொண்டு விமகாலட்சுமியின் உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளி ஏற்றுக்கொள்ளப்பட்டது.**
**மேற்படி வசூல் செய்யும் உரிமம் மூன்று ஆண்டுகளுக்கு வழங்கவும் அனுமதி அளிக்கப்பட்டது**
**மன்றத்தீர்மான எண்.148**

9. நகராட்சிக்கு சொந்தமான கீழ்க்கண்ட 15 கடைகளுக்கு 27.05.2022ந் தேதியன்று பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது.

1. பழைய பேருந்து நிலைய MUDF கடை எண். 25, 39, 35, 36, 50, 52, 38, 65, 21
2. வாரச்சந்தை IUDP கடை எண்.16
3. வாய்க்கால் ரோட்டில் அமைக்கப்பட்டுள்ள புதிய கடை எண். 3
4. புதிய பேருந்து நிலைய காலியிடத்தில் உள்ள இளநீர் கடை.
5. பழைய பேருந்து நிலைய கடை எண். 4
6. ராமநாதன் வீதி கடை எண். 2
7. புதிய பேருந்து நிலைய IUDP கடை எண். 9

மேற்கண்ட கடைகளுக்கு நடைபெற்ற பொது ஏலத்தில் வரிசை எண். 7 ல் கண்டுள்ள புதிய பேருந்து நிலைய IUDP கடை எண். 9 ஐ தவிர மற்ற கடைகளுக்கு ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளியில் கலந்துகொள்ளவில்லை.

வரிசை எண். 7 ல் கண்டுள்ள புதிய பேருந்து நிலைய IUDP கடை எண். 9 க்கு மட்டும் கீழ்க்கண்ட விபரப்படி மூன்று ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. மேலும் இரண்டு நபர்கள் ஏலத்தில் கலந்து கொண்டனர்.

| வ. எண் | குத்தகை இனங்கள் | ஒப்பந்தப்புள்ளி அளித்தவர்கள் பெயர் | ஏற்கெனவே உள்ள மாத வாடகை ரூ. | ஒப்பந்தப்புள்ளியில் குறிப்பிட்ட மாத வாடகை ரூ. | ஏலக் கேள்வி |
|---|---|---|---|---|---|
| [1] | [2] | [3] | [4] | | [5] |
| 1 | புதிய பேருந்து நிலைய IUDP கடை எண். 9 | திரு.கா.இப்ராஹிம்கான் த/பெ. காதர்கான், 1139, கவிதா நகர், குள்ளம்பாளையம், கோபிசெட்டிபாளையம் 98680 27060 | ரூ.9,059/- | ரூ.15,640/- | இல்லை |
| | | திரு.அ.காதர்கான் த/பெ. ஐ.அப்துல் ரஹீம் கான் 110, பரிமளம் காம்ப்ளக்ஸ், புதிய ஆஸ்பத்திரி வீதி, கோபிசெட்டிபாளையம் | ரூ.9,059/- | ரூ.12,346/- | |
| | | திரு.எம்.முகமது ஜலாலுதீன் த/பெ. முகமது இக்பால், 2, பதிவிலாஸ் ரோடு, நாகமலை எக்ஸ்டன்சன், கோபிசெட்டிபாளையம் | ரூ.9,059/- | ரூ.12,758/- | |
| | | திரு.என்.எஸ்.சம்சுதீன் த/பெ. என்.ஏ.சர்புதீன், 11/3, திரு.வி.க.வீதி, நல்லகவுண்டன்பாளையம், கோபிசெட்டிபாளையம். | ரூ.9,059/- | இல்லை | ரூ.18,300/- |
| | | திருமதி.கே.ரித்வானா க/பெ. எம்.கமால்தீன், B 38 சாய் அபிராம் நகர், மின் நகர், கோபி | ரூ.9,059/- | இல்லை | ரூ.18,700/- |

4. வரிசை எண். 1. புதிய பேருந்து நிலைய IUDP கடை எண். 9 க்கு ஏற்கெனவே உள்ள மாதவாடகை ரூ.9,059/- ஐ விட கூடுதலாக ரூ.6,581/- சேர்த்து ரூ.15,640/-க்கும், மற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளை காட்டிலும் கூடுதலாகவும் திரு.கா.இப்ராஹிம்கான் என்பவர் உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ளார்.

மேலும் மேற்படி கடைக்கு இரண்டு நபர்கள் மட்டும் ஏலத்தில் கலந்து கொண்டதில், திருமதி.கே.ரித்வானா என்பவர், திரு.என்.எஸ்.சம்சுதீன் என்பவர் கோரிய ஏலத்தொகை ரூ.18,300/- ஐ விட கூடுதலாக ரூ.400/- சேர்த்து, மாதவாடகை ரூ.18,700/-க்கு ஏலம் கோரியுள்ளார். மேற்படி ஏலத்தொகையானது, கடையின் மாதவாடகை ரூ.9,059/- ஐ விட ரூ.9,641/- கூடுதலாகவும், திரு.கா.இப்ராஹிம்கான் என்பவர் அளித்துள்ள உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ.15,640/- ஐ விட ரூ.3,060/- கூடுதலாகவும் உள்ளது.

எனவே புதிய பேருந்து நிலைய IUDP கடை எண். 9 க்கு திருமதி.கே.ரித்வானா க/பெ. கமால்தீன் என்பவர் கோரிய உயர்ந்தபட்ச ஏலத்தொகை ரூ.18,700/- ஏற்பது குறித்து மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

5. ஏலம் போகாத மற்ற கடைகளுக்கு மறு பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரலாம். (ந.க.எண். 1567/2018/அ3)

**அலுவலக குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.

**கே.ரித்வானா க/பெ கமால்தீன் –ன் உயர்ந்தபட்ச ஏலத்தொகை ஏற்றுக்கொள்ளப்பட்டது. ஏலம் போகாத மற்ற கடைகளுக்கு மறுபொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோர அனுமதிக்கப்பட்டது மன்றத்தீர்மான எண்.149**

10. கோபிசெட்டிபாளையம் நகராட்சி பொறியியல் பிரிவில் உள்ள கணிணியின் Hard Disk பழுது காரணமாக அதில் பதிவாகி உள்ள பழைய பதிவுகளை பயன்படுத்த இயலாத நிலை உள்ளது. மேற்படி Hard Disk Data recovery இவ்வலுவலகத்தில் செய்ய இயலாததால் தனியார் கணிணி நிறுவனம் மூலம் மேற்கொள்ளவும் அதற்கான உத்தேச செலவினம் ரூ.10,000/– ஆகும் எனவும் , இப்பணியினை மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**1. மன்றம் அனுமதி வழங்கலாம்
2. செலவினத்தை நகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ளலாம் .

**அலுவலக குறிப்பு 1,2 அனுமதி அளிக்கப்பட்டது. மன்றத்தீர்மான எண்.150**

11. கோபிசெட்டிபாளையம் நகராட்சிக்கு சொந்தமான உயர்கோபுர மின் விளக்குகளில் கீழ்கண்டுள்ள இடங்களிலுள்ள உயர்கோபுர மின்விளக்குகள் பழுதடைந்து எரியாத நிலையில் உள்ளது.

1. மார்க்கெட் சாலை
2. பாரியூர் மெயின் ரோடு
3. G.H. ரோடு சந்திப்பு
4. சத்தி மேயின் ரோடு அமலா பள்ளி சந்திப்பு

மேற்படி உயர்மின் கோபுர மின்விளக்கு உபகரணங்கள் BULB , Driver diode ஆகியவற்றினை மீண்டும் சரிசெய்து பயன்டுத்த இயலாத நிலையில் உள்ளது. எனவே பழுதடைந்து எரியாத நிலையில் உள்ள உயர்கோபுர விளக்குகளை அகற்றிவிட்டு புதியதாக 150 watts LED Flood Light 20 எண்ணிக்கையில் வாங்கி பொருத்துவதற்கும் , அதற்கான மதிப்பீட்டு செலவின தொகை ரூ.3.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதியும் கோரப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :** 1. மன்றம் அனுமதி வழங்கலாம்
2. செலவினத்தை நகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ளலாம் .
3. தற்போது இந்நகராட்சியில் தெரு விளக்குகள் பராமரிப்பு செய்து வரும் SCHNELL Energy Equipments (P) Ltd . தனியர் நிறுவனம் மூலம் மேற்படி உயர்கோபுர மின்விளக்குகளையும் ஒப்படைப்பு செய்து பராமரிக்கலாம் .

**அலுவலக குறிப்பு 1,2 மற்றும் 3 அனுமதி அளிக்கப்பட்டது. மன்றத்தீர்மான எண்.151**

12. கோபிசெட்டிபாளையம் நகராட்சியிக்கு சொந்தமான கரட்டூர் உரக்கிடங்கில் உள்ள கூடுதல் அளவு (Buffer Quantity) குப்பைகள் 2682 க.மீ குப்பைகளை Bio–Mining முறையில் பிரித்து அப்புறப்படுத்தும் பணியினை 15$^{th}$ CFC 2020– 2021 இன் கீழ் செயல்படுத்திட M/s.Explosive Enerprises நிறுவனத்திற்கு 29.10.2021 இல் பணி உத்திரவு வழங்கப்பட்டது. இப்பணியின் திட்டக்காலம் '3' மாதங்கள் ஆகும் . இப்பணியினை விரைந்து முடித்து தர தெரிவித்து ஒப்பந்ததாரருக்கு பல அறிவிப்புகள் வழங்கியும் நகர்மன்ற தலைவர் அவர்களின் ஆய்வுக்கூட்டங்களில் அறிவுரைகள் வழங்கப்பட்டும் பணியினை முடிக்காமல் காலதாமதம் ஏற்படுத்தி வந்தார் . மேலும் தேசிய பசுமை

தீர்ப்பாயம் (தென் மண்டலம் ) (NGT –South zone ) சென்னை அவர்களின் உத்திரவில் முழு பணியும் முடித்து 04.07.2022 ஆம் தேதி இறுதி அறிக்கை தாக்கல் செய்திட உத்திரவிடப்பட்டுள்ளது.

ஆனால் ஒப்பந்ததாரர் M/s.Explosive Enterprises பணியினை முடிக்காத காரணத்தால் இப்பணிக்கு இவருடன் ஒப்பந்தப்புள்ளி அளித்திருந்த (L2) R.மாணிக்கம் ஒப்பந்ததாரர் க்கு 'L1' விலை விகிதத்தில் பணியினை செய்திட பணி உத்தரவு வழங்கிடவும் , 'L1' M/s.Explosive Enerprises செலுத்திய 'EMD ' தொகையினை பறிமுதல் செய்திடவும் அவரது ஒப்பந்தப்புள்ளியினை ரத்து செய்திடவும் மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :** 1. மன்றம் அனுமதி வழங்கலாம்

2. பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று 'L2' ஒப்பந்ததாரர் R.மாணிக்கம் என்பவருக்கு பணி உத்திரவு வழங்கியமைக்கு மன்றம் அங்கீகரிக்கலாம்.

**அலுவலக குறிப்பு 1. அனுமதிக்கப்பட்டது.**

**2. அங்கீகரிக்கப்பட்டது. மன்றத்தீர்மான எண்.152**

13. ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்.25152/2021/பஅ7 நாள்.07.06.2022 – ல் ஈரோடு மாவட்டம் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவு திட்டத்தின் கீழ் பராமரிக்கப்பட்டு வரும் வங்கி கணக்குகளை மாநில வங்கி கணக்குடன் ஒருங்கிணைத்து RBL வங்கியில் PFMS மூலம் செயல்பட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும், மாநில கணக்குகளை (SNA) கையாள்வதற்கு இந்நகராட்சி ஆணையாளருக்கு Digital Signature Key வழங்கப்பட்டுள்ளது.

மேற்படி, Digital Signature Key பெறப்பட்டதற்கான செலவினத்தினை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயல்முறை உத்திரவிற்கிணங்க Digital Signature Key வழங்கிய SCO CORPORATE SOLUTIONS சென்னை என்ற நிறுவனத்திற்கு ரூ.3000/– நகர்மன்ற தவைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேற்படி செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொண்டமைக்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண்.1335/2022/என்1)

**அலுவலக குறிப்பு :–** மன்றம் அனுமதிக்கலாம்.

**அனுமதிக்கப்பட்டது மன்றத்தீர்மான எண்.153**

14. நகராட்சிக்கு சொந்தமான கீழ்க்கண்ட 26 கடைகளுக்கு 15.06.2022ந் தேதியன்று பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது.

1. புதியாஸ்பத்திரி வீதி கடை எண். 7 மற்றும் 8.
2. பழைய பேருந்து நிலைய MUDF கடை எண். 33, 34, 42, 43, 55, 57, 58, 59, 60, 61, 66, 67, 69, 70, 71, 72, 73, 74
3. பழைய பேருந்து நிலைய MUDF கடை எண். 20
4. பழைய பேருந்து நிலைய MUDF கடை எண். 56, 45
5. வாரச்சந்தை கடை எண். 31
6. பழைய பேருந்து நிலையம் MUDF கடை எண். 54
7. பழைய பேருந்து நிலையம் MUDF கடை எண். 47

மேற்கண்ட கடைகளுக்கு நடைபெற்ற பொது ஏலத்தில் ஒருவரும் கலந்துகொள்ளவில்லை. இரண்டு கடைகளுக்கு மட்டும் கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளது.

| வ. எண் | குத்தகை இனங்கள் | ஒப்பந்தப்புள்ளி அளித்தவர்கள் பெயர் | ஏற்கெனவே உள்ள மாத வாடகை ரூ.. | ஒப்பந்தப்புள்ளியில் குறிப்பிட்ட மாத வாடகை ரூ. | ஏலக் கேள்வி |
|---|---|---|---|---|---|
| [1] | [2] | [3] | [4] | [5] | [6] |
| 1 | பழைய பேருந்து நிலைய MUDF கடை எண். 43 | அன்னை சந்தியா மகளிர் நாணயச் சங்கம், 67, காமாட்சியம்மன் கோயில் வீதி, புதுப்பாளையம், கோபி 638 476 | ரூ.1,500/- | **ரூ.1,650/-** | இல்லை |
| | | திருமதி.எஸ்.லட்சுமி, சீதாலட்சுமிபுரம், கோபி | ரூ.1,500/- | ரூ.1,550/- | |
| 2 | பழைய பேருந்து நிலைய MUDF கடை எண். 20 | திரு.ஏ.ஆனந்தக்குமார் த/பெ. கே.ஆறுமுகம், 340, எஸ்.பி.நகர், குள்ளம்பாளையம், கோபி 96590 02104 | ரூ.4,550/- | **ரூ.4,666/-** | இல்லை |

மேற்கண்டவாறு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில்

1. வரிசை எண். 1. பழைய பேருந்து நிலைய MUDF கடை எண். 43 - க்கு திருமதி.எஸ்.லட்சமி என்பவரது ஒப்பந்தப்புள்ளியை விட கூடுதலாகவும், ஏற்கெனவே உள்ள மாத வாடகை ரூ.1,500/- ஐ விட கூடுதலாக ரூ.150/- சேர்த்து அன்னை சந்தியா மகளிர் நாணயச் சங்கம், கோபிசெட்டிபாளையம் அவர்கள் உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ளனர்.

2. வரிசை எண். 2. பழைய பேருந்து நிலைய MUDF கடை எண். 20 - க்கு ஏற்கெனவே உள்ள மாதவாடகை ரூ.4,550/- ஐ விட கூடுதலாக ரூ.116/- சேர்த்து ரூ.4,666/- க்கு திரு.ஏ.ஆனந்தக்குமார் த/பெ. கே.ஆறுமுகம் என்பவர் ஒருவர் மட்டுமே ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ளார்.

வருவாய் ஆய்வர் அவர்கள் 16.06.2022 ந் தேதியில் பின்வருமாறு குறிப்புவழங்கியுள்ளார்.

வரிசை எண். 2 ல் கண்டுள்ள பழைய பேருந்து நிலைய MUDF கடை எண். 20 க்கு திரு.ஏ.ஆனந்தக்குமார் என்பவர் ஒருவர் மட்டுமே ரூ. 4,666/- க்கு ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ளார். மேற்படி கடைக்கு 08.09.2021 ந் தேதியில் நடைபெற்ற ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளியில் திரு.வினோத்குமார் என்பவரால் ரூ.4,550/-க்கு உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளி அளிக்கப்பட்டு, அதன்படி 27.09.2021 ல் திரு.வினோத்குமார் என்பவருக்கு குத்தகை உரிமம் வழங்கப்பட்டது. அதனையடுத்து திரு.வினோத்குமார் என்பவர் மேற்படி பழைய பேருந்து நிலைய MUDF கடை எண். 20 க்கு தவறுதலாக ரூ.4,550/-க்கு ஒப்பந்தப்புள்ளி அளித்துவிட்டதாகவும், தற்சமயம் என்னால் இவ்வளவு வாடகையை செலுத்த இயலாத காரணத்தினால் தனது ஒப்பந்தப்புள்ளியை ரத்து செய்து தருமாறு கோரியுள்ளார்.

மேற்கண்ட காரணத்தினால் திரு.வினோத்குமார் அவர்களுக்கு வழங்கப்பட்ட குத்தகை உரிமத்தினை ரத்து செய்து அக்கடைக்கு பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. அதன்பிறகு 9 முறை 08.10.2021, 12.11.2021, 18.11.2021, 07.12.2021, 23.12.2021, 04.01.2022, 20.01.2022, 23.03.2022, 13.04.2022 ஆகிய தேதிகளில் நடந்த ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளியில் எவரும் அக்கடையினை எடுக்க முன்வரவில்லை. 10 வது முறையாக 05.05.2022 ந் தேதியில் பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், திரு.ஆர்.நாகேந்திரன் என்பவரால், ரூ.1,800/-க்கு

ஒப்பந்தப்புள்ளி அளிக்கப்பட்டது. மேற்படி ஒப்பந்தப்புள்ளி ஏற்கப்படவில்லை. தற்போது 15.06.2022 ந் தேதி நடந்த பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளியில் திரு.ஏ.ஆனந்தகுமார் என்பவர் ஒருவர் மட்டுமே ரூ.4,666/–க்கு ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ளார். மேற்கண்ட விபரங்களின்படி மேற்படி கடையினை தொடர் ஏல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டும், எவரும் அக்கடையினை ஏலம் எடுக்க முன்வராததால், நகராட்சிக்கு தொடர் வருவாய் இழப்பு ஏற்பட்டு வருகிறது.

எனவே நகராட்சிக்கு ஏற்படும் தொடர் நிதி இழப்பினை தவிர்க்கும் பொருட்டு, பழைய பேருந்து நிலைய MUDF கடை எண். 20 க்கு ஏற்கெனவே உள்ள வாடகை ரூ.4,550/– ஐ விட கூடுதலாக ரூ.116/– சேர்த்து ரூ.4,666/– க்கு திரு.ஏ.ஆனந்தகுமார் அவர்கள் அளித்துள்ள ஒப்பந்தப்புள்ளியை ஏற்பது குறித்து மன்றத்தின் அனுமதி பெற்று மூன்றாண்டுகளுக்கு குத்தகை உரிமம் வழங்கலாம் என குறிப்பு வழங்கியுள்ளார்.

எனவே வரிசை எண். 1. பழைய பேருந்து நிலைய MUDF கடை எண். 43 மற்றும் வரிசை எண். 2. பழைய பேருந்து நிலைய MUDF கடை எண். 20 ஆகியவற்றிற்கு அளிக்கப்பட்டுள்ள உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளிகளை ஏற்பது குறித்து மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

3. ஏலம் போகாத மற்ற கடைகளுக்கு மறு பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரலாம் (ந.க.எண். 301/2021/அ3)

**அலுவலக குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.
**அலுவலக குறிப்பு 1.அன்னை சந்தியா மகளிர் நாணய சங்கத்தின் உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளி ஏற்றுக்கொள்ளப்பட்டது.**
**2.நகராட்சிக்கு ஏற்படும் தொடர் நிதி இழப்பினை தவிர்க்கும் பொருட்டு ஏஆனந்தக்குமாரின் ஒப்பந்தப்புள்ளி ஏற்றுக்கொள்ளப்பட்டது.**
**ஏலம் போகாத மற்ற கடைகளுக்கு மறு பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோர அனுமதிக்கப்பட்டது. மன்றத்தீர்மான எண்.154**

15. நகராட்சிக்கு சொந்தமான கீழ்க்கண்ட ஆண்டு குத்தகை இனங்களுக்கு 15.06.2022 ஆம் தேதியன்று பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது.

1. நகராட்சி பேருந்து நிலையத்தில் பேருந்துகளுக்கு கட்டணம் வசூலிக்கும் உரிமம்.
2. நகராட்சி தலைமை குடிநீர் நிலைய மரங்களின் பலன்களை அனுபவிக்கும் உரிமம்.
3. புதிய பேருந்து நிலையத்தில் ஒலி, ஒளி அமைத்து விளம்பரம் செய்வதற்கான உரிமம்.

மேற்கண்ட ஆண்டு குத்தகை இனங்களுக்கு நடைபெற்ற பொது ஏலத்தில் ஒருவரும் கலந்துகொள்ளவில்லை. கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் மட்டும் பெறப்பட்டுள்ளது.

| வ. எண் | ஆண்டு குத்தகை இனங்கள் | ஒப்பந்தப்புள்ளி அளித்தவர்கள் பெயர் | ஒப்பந்தப்புள்ளி யில் குறிப்பிட்ட ஆண்டு குத்தகை தொகை ரூ. | ஏலக் கேள்வி |
|---|---|---|---|---|
| [1] | [2] | [3] | [4] | [5] |
| 1 | புதிய பேருந்து நிலையத்தில் ஒலி ஒளி அமைத்து விளம்பரம் செய்வதற்கான உரிமம் | திருமதி.டி.நிர்மலா, க/பெ. கே.எஸ்.தங்கராஜ், 52, முனியப்பன் கோயில் வீதி, கூகலூர் 638 313 | ரூ.71,700/– | இல்லை |
| | | திரு.கே.ஏ.குமரகுருபரர், 11, தோகைமுருகன் நகர். நல்லகவுண்டன்பாளைம், கோபி | ரூ.66,500/– | |

மேற்கண்ட விபரப்படி வரிசை எண். 1 ல் கண்டுள்ள ஆண்டு குத்தகை இனமானது 2012–2013 ஆம் ஆண்டிலிருந்து நீக்கம் செய்யப்பட்டு, தற்போது மன்றத் தீர்மான எண். 66 நாள் 29.04.2021 ன் படி புதியதாக ஏற்படுத்தப்பட்டுள்ளது. மேற்படி குத்தகை இனம் கடைசியாக 2012–2013 ஆம் ஆண்டில் ஆண்டு குத்தகை தொகை ரூ.67,260/– க்கு ஏலம் விடப்பட்டுள்ளது.

தற்போது திருமதி.டி.நிர்மலா என்பவர், கடைசியாக ஏலம் விடப்பட்ட குத்தகை தொகை ரூ.67,260/–ஐ விட கூடுதலாக ரூ.4,440/– சேர்த்தும், மற்றொரு ஒப்பந்தப்புள்ளிதாரர் திரு.கே.ஏ.குமரகுருபரர் என்பவர் அளித்துள்ள ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ.66,500/–ஐ விட கூடுதலாக ரூ. 5,200/– சேர்த்தும் ரூ.71,700/– க்கு உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ளார்.

எனவே மேற்படி உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளி குறிப்பிடப்பட்டுள்ள திருமதி,டி.நிர்மலா க/பெ. கே.எஸ்.தங்கராஜ் என்பவரது ஒப்பந்தப்புள்ளியை ஏற்பது குறித்து மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

ஏலம் போகாத மற்ற இனங்களுக்கு மறு ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரலாம்.
(ந.க.எண். 2977/2020/அ3)

**அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.**
**டி.நிர்மலா க/பெ K.S.தங்கராஜ் என்பவரது உயர்ந்த பட்ச ஒப்பந்தப்புள்ளி ஏற்றுக்கொள்ளப்பட்டது. ஏலம் போகாத மற்ற இனங்களுக்கு மறு ஏலும் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோர அனுமதிக்கப்பட்டது மன்றத்தீர்மான எண்.155**

16. இந்நகராட்சிக்கு சொந்தமான கீழ்க்கண்டுள்ள கடைகள் மற்றும் காலியிட குத்தகை இனங்களுக்கு 31.03.2016 அன்று 9 ஆண்டுகள் குத்தகை காலம் முடிவடைந்த நிலையில் அரசாணை (நிலை) எண். 92 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி4)துறை. நாள் 03.07.2007 ன் படி அப்போதைய அங்காடி மதிப்பின் அடிப்படையில் வாடகை மறுநிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. மன்றத் தீர்மான எண். 469 நாள் 26.12.2016. (4700/2015/அ3) மேற்கண்டவாறு மறுநிர்ணயம் செய்யப்பட்ட வாடகையின் அடிப்படையில் 01.04.2016 முதல் 31.03.2019 வரை (முதல் மூன்று ஆண்டுகள்) மற்றும் 01.04.2019 முதல் 31.03.2022 வரை (இரண்டாவது மூன்று ஆண்டுகள்) பட்டியலில் கண்டுள்ள கடை குத்தகைதாரர்களுக்கு உரிமம் வழங்கப்பட்டு, மேற்படி உரிமம் 31.03.2022 ந் தேதியுடன் முடிவடைந்தது. தற்போது பட்டியலில் கண்டுள்ள கடைகளுக்கு 01.04.2022 ந் தேதி முதல் 31.03.2025 (மூன்றாவது மூன்று ஆண்டுகள்) வரை தற்போது உள்ள மாத வாடகையில் 15 சதவீதம் உயர்வு செய்து மேலும் மூன்றாண்டுகளுக்கு குத்தகை உரிமத்தை புதுப்பிக்கப்படவேண்டியுள்ளது.

| வ. எண் | வரி விதிப்பு எண் | உரிமதாரரின் பெயர் | கடையின் விபரம் | உரிமம் முடிவடையும் காலம் | தற்போதைய வாடகை | 15 சதவீதம் உயர்வு | உரிம காலம் |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 |
| 1 | 58 | ஆறுமுகம் | வாய்க்கால் ரோடு பதிவிலாஸ் வீதி கடை எண். 2 | 31.03.2022 | 1,725 | 1,984 | 01.04.2022 TO 31.03.2025 |
| 2 | 131 | பொது மேலாளர், ஈ.மா,கூ,பா.உ.சங்கம் ED 296 | காளமேகம் வீதி 16 ' 8 காலியிடம் | 31.03.2022 | 3,680 | 4,232 | 01.04.2022 TO 31.03.2025 |
| 3 | 511 | வி.ரமேஷ்குமார் | மோர் மார்கட் கடை எண். 3 | 31.03.2022 | 7,360 | 8,464 | 01.04.2022 TO 31.03.2025 |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 4 | 513 | கே.சக்தி | மோர் மார்கட் கடை எண். 5 | 31.03.2022 | 7,360 | 8,464 | 01.04.2022 TO 31.03.2025 |
| 5 | 520 | ஜி.வி.மாரிசாமி | மோர் மார்கட் கடை எண். 12 | 31.03.2022 | 7,360 | 8,464 | 01.04.2022 TO 31.03.2025 |
| 6 | 538 | என்.பாக்கியலட்சுமி | வாரசந்தை கடை எண். 9 | 31.03.2022 | 4,359 | 5,012 | 01.04.2022 TO 31.03.2025 |
| 7 | 543 | கே.குருசாமி | வாரசந்தை கடை எண். 14 | 31.03.2022 | 4,359 | 5,012 | 01.04.2022 TO 31.03.2025 |
| 8 | 557 | எம்.இ.சிவக்குமார் | வாரசந்தை கடை எண். 28 | 31.03.2022 | 4,359 | 5,012 | 01.04.2022 TO 31.03.2025 |
| 9 | 562 | எஸ்.ரவிச்சந்திரன் | புதிய பேருந்து நிலைய IUDP கடை எண். 2 | 31.03.2022 | 7,878 | 9,059 | 01.04.2022 TO 31.03.2025 |
| 10 | 563 | எஸ்.ரவிச்சந்திரன் | புதிய பேருந்து நிலைய IUDP கடை எண். 3 | 31.03.2022 | 7,878 | 9,059 | 01.04.2022 TO 31.03.2025 |
| 11 | 565 | கே.சி.முருகசாமி | புதிய பேருந்து நிலைய IUDP கடை எண். 5 | 31.03.2022 | 7,878 | 9,059 | 01.04.2022 TO 31.03.2025 |
| 12 | 572 | கே.ஷேக் அலாவுதீன் | புதிய பேருந்து நிலைய IUDP கடை எண். 12 | 31.03.2022 | 7,878 | 9,059 | 01.04.2022 TO 31.03.2025 |
| 13 | 578 | எம்.சுப்புலட்சுமி | புதிய பேருந்து நிலைய IUDP கடை எண். 18 | 31.03.2022 | 7,878 | 9,059 | 01.04.2022 TO 31.03.2025 |
| 14 | 596 | எம்.பஷீர்அகமது | பழைய லாரிநிலைய IUDP கடை எண்.10 | 31.03.2022 | 9,200 | 10,580 | 01.04.2022 TO 31.03.2025 |
| 15 | 847 | கே.ஜோதி | பழைய பேருந்து நிலைய MUDF கடை எண்.31 | 31.03.2022 | 4,083 | 4,695 | 01.04.2022 TO 31.03.2025 |
| 16 | 057/BD01/ 00012 (53) | ஜி.கே.செந்தில்குமார் | மொடச்சூர் கடை எண். 1 | 31.01.2022 | 1,666 | 1,916 | 01.02.2022 TO 31.01.2025 |
| 17 | 541 | டி.மோகனாம்பாள் | வாரசந்தை கடை எண். 22 | 31.12.2021 | 3,910 | 4,497 | 01.01.2022 TO 31.12.2024 |
| 18 | 106 | கி.சுப்பிரமணியன் | பழைய பேருந்து நிலைய கடை எண். 7 | 31.03.2022 | 3,726 | 4,285 | 01.04.2022 TO 31.03.2025 |
| 19 | 509 | ஜி.வி.மாரிசுவாமி | மோர் மார்கட் கடை எண். 1 | 31.03.2022 | 7,360 | 8,464 | 01.04.2022 TO 31.03.2025 |
| 20 | 533 | கிருஷ்ணமூர்த்தி | வாரசந்தை கடை எண். 4 | 31.03.2022 | 4,359 | 5,012 | 01.04.2022 TO 31.03.2025 |
| 21 | 534 | எம்.பி.பழனியப்பன் | வாரசந்தை கடை எண். 5 | 31.03.2022 | 4,359 | 5,012 | 01.04.2022 TO 31.03.2025 |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 22 | 535 | எம்.எஸ்.முருகன் | வாரசந்தை கடை எண். 6 | 31.03.2022 | 4,359 | 5,012 | 01.04.2022 TO 31.03.2025 |
| 23 | 536 | எம்.எஸ்.முருகன் | வாரசந்தை கடை எண். 7 | 31.03.2022 | 4,359 | 5,012 | 01.04.2022 TO 31.03.2025 |
| 24 | 537 | எம்.சரவணகுமார் | வாரசந்தை கடை எண். 8 | 31.03.2022 | 4,359 | 5,012 | 01.04.2022 TO 31.03.2025 |
| 25 | 544 | டி.ரமேஷ் | வாரசந்தை கடை எண். 15 | 31.03.2022 | 4,359 | 5,012 | 01.04.2022 TO 31.03.2025 |
| 26 | 546 | ஜி.சுப்ரமணியம் | வாரசந்தை கடை எண். 17 | 31.03.2022 | 4,359 | 5,012 | 01.04.2022 TO 31.03.2025 |
| 27 | 549 | ஜி.எம்.பழனியப்பன் | வாரசந்தை கடை எண். 20 | 31.03.2022 | 4,359 | 5,012 | 01.04.2022 TO 31.03.2025 |
| 28 | 550 | ஆர்.தனபாக்கியம் | வாரசந்தை கடை எண். 21 | 31.03.2022 | 4,359 | 5,012 | 01.04.2022 TO 31.03.2025 |
| 29 | 551 | கே.பி.தனபால் | வாரசந்தை கடை எண். 22 | 31.03.2022 | 4,359 | 5,012 | 01.04.2022 TO 31.03.2025 |
| 30 | 552 | கே.எம்.நாரயணசாமி | வாரசந்தை கடை எண். 23 | 31.03.2022 | 4,359 | 5,012 | 01.04.2022 TO 31.03.2025 |
| 31 | 553 | எம்,கே.ஆறுமுகம் | வாரசந்தை கடை எண். 24 | 31.03.2022 | 4,359 | 5,012 | 01.04.2022 TO 31.03.2025 |
| 32 | 554 | வி.எம்.மெய்யப்பன் | வாரசந்தை கடை எண். 25 | 31.03.2022 | 4,359 | 5,012 | 01.04.2022 TO 31.03.2025 |
| 33 | 555 | வி.எம்.மெய்யப்பன் | வாரசந்தை கடை எண். 26 | 31.03.2022 | 4,359 | 5,012 | 01.04.2022 TO 31.03.2025 |
| 34 | 556 | எம்.எஸ்.அல்லிமுத்து | வாரசந்தை கடை எண். 27 | 31.03.2022 | 4,359 | 5,012 | 01.04.2022 TO 31.03.2025 |
| 35 | 561 | எம்.யோகமூர்த்தி | புதிய பேருந்து நிலைய IUDP கடை எண். 1 | 31.03.2022 | 7,855 | 9,033 | 01.04.2022 TO 31.03.2025 |
| 36 | 564 | டி.ஆர்.தண்டபாணி | புதிய பேருந்து நிலைய IUDP கடை எண். 4 | 31.03.2022 | 7,878 | 9,059 | 01.04.2022 TO 31.03.2025 |
| 37 | 566 | எம்.கே.துரைசாமி | புதிய பேருந்து நிலைய IUDP கடை எண். 6 | 31.03.2022 | 7,878 | 9,059 | 01.04.2022 TO 31.03.2025 |
| 38 | 568 | கே.ரஹிமான் | புதிய பேருந்து நிலைய IUDP கடை எண். 8 | 31.03.2022 | 7,878 | 9,059 | 01.04.2022 TO 31.03.2025 |
| 39 | 570 | டி.ஏ.பழனிசாமி | புதிய பேருந்து நிலைய IUDP கடை எண். 10 | 31.03.2022 | 7,878 | 9,059 | 01.04.2022 TO 31.03.2025 |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 40 | 571 | ஜே.முகமதுஹாரூன் | புதிய பேருந்து நிலைய IUDP கடை எண். 11 | 31.03.2022 | 7,878 | 9,059 | 01.04.2022 TO 31.03.2025 |
| 41 | 574 | எஸ்.ரசீதா | புதிய பேருந்து நிலைய IUDP கடை எண். 14 | 31.03.2022 | 7,878 | 9,059 | 01.04.2022 TO 31.03.2025 |
| 42 | 575 | ஜே.சுப்பிரமணியம் | புதிய பேருந்து நிலைய IUDP கடை எண். 15 | 31.03.2022 | 7,878 | 9,059 | 01.04.2022 TO 31.03.2025 |
| 43 | 579 | ஜி.குணசுந்தரி | புதிய பேருந்து நிலைய IUDP கடை எண். 19 | 31.03.2022 | 7,878 | 9,059 | 01.04.2022 TO 31.03.2025 |
| 44 | 580 | ஜி.பி.சக்திவேல் | புதிய பேருந்து நிலைய IUDP கடை எண். 20 | 31.03.2022 | 7,878 | 9,059 | 01.04.2022 TO 31.03.2025 |
| 45 | 581 | ஜி.பி.செந்தில்குமார் | புதிய பேருந்து நிலைய IUDP கடை எண். 21 | 31.03.2022 | 7,878 | 9,059 | 01.04.2022 TO 31.03.2025 |
| 46 | 582 | ஏ.பி.ஆறுமுகம் | புதிய பேருந்து நிலைய IUDP கடை எண். 22 | 31.03.2022 | 7,878 | 9,059 | 01.04.2022 TO 31.03.2025 |
| 47 | 583 | டி.பி.பாலசுப்ரமணியம் | புதிய பேருந்து நிலைய IUDP கடை எண். 23 | 31.03.2022 | 7,878 | 9,059 | 01.04.2022 TO 31.03.2025 |
| 48 | 808 | வி.வி,இளங்கோ | புதிய பேருந்து நிலைய MUDF கடை எண்.8 | 31.03.2022 | 16,100 | 18,515 | 01.04.2022 TO 31.03.2025 |
| 49 | 835 | எஸ்.பாலமுருகன் | பழைய பேருந்து நிலைய MUDF கடை எண்.19 | 31.03.2022 | 6,670 | 7,671 | 01.04.2022 TO 31.03.2025 |

மேற்படி கடைகளில் வரிசை எண். 1 முதல் 17 வரை உள்ள கடை குத்தகைதாரர்கள் உரிமம் புதுபித்தல் கட்டணம், வித்தியாச வைப்புத் தொகை மற்றும் புகைப்படத்துடன் கூடிய ஒப்பந்தப்பத்திரம் சமர்பித்துள்ளனர். வரிசை எண். 18 முதல் 49 வரை உள்ள கடைக்குத்தகைதாரர்கள் வாடகை மறுமதிப்பீடு செய்யப்பட்டதினை எதிர்த்து கோபிசெட்டிபாளையம் மாவட்ட உரிமையியல் நடுவர் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்துள்ளனர். நகர்மன்ற வழக்கறிஞர் திரு.U.K. காணிவேலுச்சாமி அவர்கள், தனது 24.05.2022 ந் தேதிய சட்டக்கருத்துருவில், வழக்கு நிலுவையில் உள்ள கடைகளுக்கு வாடகை உயர்வு செய்ய நீதிமன்றத்தில் எவ்வித தடையும் இல்லை எனத் தெரிவித்துள்ளனர்.

எனவே பட்டியலில் கண்டுள்ள 49 கடைகளுக்கு கலம் (6) ல் உள்ள தற்போதைய வாடகையில் 15 சதவீதம் உயர்வு செய்து கலம் (7) ல் கண்டுள்ள படி மாதவாடகை நிர்ணயம் செய்து, மூன்றாண்டுகளுக்கு குத்தகை உரிமத்தினை புதுப்பித்து வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண். 2575/2017/அ3)

**அலுவலக குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.

**வரிசை எண்.1 முதல் 49 முடிய உள்ள கடைகளுக்கு வாடகை உயர்வு செய்ய அனுமதி அளிக்கப்பட்டது. மன்றத்தீர்மான எண்.156**

17. கோபிசெட்டிபாளையம் நகராட்சியில் நடைபெற்று வரும் வளர்ச்சி திட்டப்பணிகளின் விபரம் தினசரி நாளிதழில் விளம்பரம் செய்வதற்கும் அதற்காகும் தோராய செலவினம் ரூ.21,500 /- க்கு (ரூபாய் இருபத்து ஓறாயிரத்து ஐநூறு மட்டும் ) அனுமதியும் , செலவினத் தொகையினை நகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :** மன்றம் அனுமதி வழங்கலாம்
**அனுமதிக்கப்பட்டது மன்றத்தீர்மான எண்.157**

18. தமிழ்நாடு அரசு சட்டமன்ற (மானியக்கோரிக்கை எண்.34) அறிவிப்புகள் 2022-23 இன் படி அரசாணை எண். G.O.(Ms) No.88 நாள். 17.06.2022 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (என்.எஸ்) துறையில் கோபிசெட்டிபாளையம் நகராட்சி வார்டு எண்.13 பழைய ஆஸ்பத்திரி வீதியில் உள்ள நகரவை நடுநிலைப்பள்ளி வளாகத்தில் (Block No.9 ward –B, Ts No. 253) அறிவுசார் மையம் (Knowledge) ரூ.194.30 இலட்சம் மதிப்பீட்டில் கட்டும் பணிக்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

மேற்படி அறிவுசார்மையம் புதிதாக அமைப்பதற்கு ஏதுவாக மேற்படி பள்ளி வளாகத்தில் பழுதடைந்து மறு பயன்பாட்டிற்கு கொண்டு வர இயலாத பழைய கட்டிடங்களை இடித்து அப்புறப்படுத்திட பொது ஏலம் மூலம் செயல்படுத்திட மன்றத்தின் அனமதி கோரப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :** மன்றம் அனுமதி வழங்கலாம்
**அனுமதிக்கப்பட்டது மன்றத்தீர்மான எண்.158**

19. இந்நகராட்சி பொதுசுகாதாரப் பிரிவிற்கு சொந்தமான வாகனம் TN 36 AJ 2139 (FRONT END LOADER) வாகனத்தின் முன்புறம் பொருத்தப்பட்டுள்ள மண் அகற்றும் பக்கெட்டில் பொருத்தப்பட்டுள்ள இரும்பு பிளேட் மிகவும் தேய்ந்துவிட்டமையால் புதியதாக இரும்பு பிளேட் பொருத்திக் கொள்ளவும் மேலும் டிராக்டரின் டிரைவர் கேபின் மேல் உள்ள டாப்பின் தார்பாய் கிழிந்து விட்டதாலும் அதற்கு புதியதாக தார்பாய் பொருத்திக் கொள்ளவும் அதற்குண்டான உத்தேச செலவினம் ரூ.10,000/- க்கு மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :** 1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. இதற்கான செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**அலுவலக குறிப்பு 1 மற்றும் 2 அனுமதிக்கப்பட்டது மன்றத்தீர்மான எண்.159**

20. இந்நகராட்சி பொது சுகாதாராப்பிரிவிற்கு கலவை உரத்திட்டத்தின் கீழ் 1990 – 91 ம் ஆண்டின் புதிதாக வாங்கப்பட்ட லாரிக்கு ஒரு ஓட்டுநர் மற்றும் ஒரு துலக்குநர் பணியிடங்களை தோற்றுவித்துக்கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறை ந.க.எண்.51510/91/ஜே1 நாள்.07.10.991ல் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. மேற்படி பணியிடங்கள் 01.10.1991 முதல் ஆண்டு தோறும் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் அனுமதி பெற்று பணி நீட்டிப்பு செய்யப்பட்டு வருகிறது. இறுதியாக மேற்படி பணியிடங்கள் 1.10.2008 முதல் 30.9.2021 வரை நீடித்து வைத்துக்கொண்டமைக்கு பின்னேற்பும் 1.10.2010 முதல் 30.9.2011 வரை நீடித்து வைத்துக்கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறைகள் ஆணை மூ.மு.எண்.8269/2010/ஜே3 நாள்.21.03.2011 ல் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

மேற்படி பணியிடம் இந்நகராட்சிக்கு அவசியமாக தேவைப்படுவதால் 01.10.2011 முதல் 30.09.2021 வரை நீடித்து வைத்துக்கொண்டமைக்கு பின்னேற்பும், 01.10.2021 முதல் நிரந்திரமாக

வைத்துக்கொள்ள அனுமதி வழங்கக் கோரி நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருப்பூர் அவர்களின் கடிதம் ந.க.எண். 3278/2021/பி3 நாள்.29.10.2021 இன் படி பரிந்துரை செய்து நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு கருத்துரு அனுப்பப்பட்டு நிலுவையில் இருந்து வருகிறது. தற்போது மேற்படி பணியிடங்களை 01.10.2011 முதல் 30.09.2022 வரை நீட்டித்து வைத்து கொள்வதற்கு பின்னேற்பும் 01.10.2022 முதல் நிரந்திரமாக வைத்துக் கொள்வதற்கும் அனுமதி வழங்கக் கோரி நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு கருத்துரு அனுபவும் இப்பணியிடங்களுக்காகும் செலவினத்தை ஏற்கவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**(ந.க.எண்.9004/2008/எச்1)**

**அலுவலகக்குறிப்பு :** மேற்படி பணியிடங்களானது இந்நகராட்சிக்கு மிகவும் அவசியமாகிறது எனவே 01.10.2011 முதல் 30.09.2022 வரை நீடித்து வைத்துக் கொள்வதற்கும் பின்னேற்பும் 01.10.2022 முதல் நிரந்தரமாக வைத்துக்கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் அனுமதி பெறவும் அதற்கான செலவினத்தை ஏற்கவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

**அனுமதிக்கப்பட்டது மன்றத்தீர்மான எண்.160**

21. கோபிசெட்டிபாளையம் நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் பணியாற்றி வரும் கீழ்கண்ட விபரப்படி அனுமதிக்கப்பட்ட 21 தூய்மைப் பணியாளர்கள் பணியிடங்கள் நீட்டிப்பு செய்தமைக்கு பின்னேற்பும், மேற்படி பணியிடங்களை நிரந்தரமாக வைத்துக்கொள்ள அனுமதி கோரியும் கீழ்கண்டவாறு கருத்துரு அனுப்ப மன்றத்தின் அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

| வ. எண் | அனுமதிக்கப்பட்ட தூய்மைப் பணியிடங்களின் எண்ணிக்கை | அனுமதிக்கப்பட்ட தூய்மைப் பணியிடங்களின் உத்தரவு விபரம் | பின்னேற்பு மற்றும் நீட்டிப்பு செய்து அனுமதிக்கப்பட்ட கால அளவு விபரம் | பின்னேற்பு மற்றும் நீட்டிப்பு செய்ய அனுமதிக்கப்பட்ட உத்தரவு விபரம் |
|---|---|---|---|---|
| 1. | தூய்மைப் பணியாளர் பணியிடங்கள் 7 எண்ணிக்கை (லாரி மஸ்தூர்) | 1.நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்கள் செயல்முறை உத்தரவு மூ.மு எண் 9618/1991/ஜே1 நாள் 05.03.1991 2.அரசாணை( நிலை) 71 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 05.05.1998 | 01.04.1991முதல் ஆண்டுதோறும் நீட்டித்துக்கொள்ள அனுமதிக்கப்பட்டதாகும். 01.10.2008 முதல் 30.09.2010 வரை பின்னேற்பு மற்றும் 01.10.2010 முதல் 30.09.2011 வரை நீட்டிப்பு அனுமதி | நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்கள் செயல்முறை உத்தரவு மூ.மு எண் 8269/10/ஜே 3 நாள் 21.03.2011 |
| 2. | தூய்மைப் பணியாளர் பணியிடங்கள் 10 எண்ணிக்கை | நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்கள் செயல்முறை உத்தரவு மூ.மு எண் 30836/2000/ஜே3 நாள்.12.06.2000 | 01.10.2008 முதல் 30.09.2010 வரை பின்னேற்பு மற்றும் 01.10.2010 முதல் 30.09.2011 வரை நீட்டிப்பு அனுமதி | நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்கள் செயல்முறை உத்தரவு மூ.முஎண் 8269/10/ஜே3 நாள் 21.03.2011 |
| 3. | தூய்மைப் பணியாளர் பணியிடங்கள் 2 எண்ணிக்கை (தினசரி அங்காடி) | நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்கள் செயல்முறை உத்தரவு மூ.மு எண் 9619/1991/ஜே1 நாள்.05.03.1991 | 01.10.2008 முதல் 30.09.2010 வரை பின்னேற்பு மற்றும் 01.10.2010 முதல் 30.09.2011 வரை நீட்டிப்பு அனுமதி | நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்கள் செயல்முறை உத்தரவு மூ.முஎண் 8269/10/ஜே3 நாள் 21.03.2011 |

| | | | | |
|---|---|---|---|---|
| 4. | தூய்மைப் பணியாளர் பணியிடங்கள் 2 எண்ணிக்கை (பேருந்து நிலையத்திற்கு) | நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்கள் செயல்முறை உத்தரவு மூ.மு எண் 9617/1991/ஜே1 நாள்.05.03.1991 | 01.10.2008 முதல் 30.09.2010 வரை பின்னேற்பு மற்றும் 01.10.2010 முதல் 30.09.2011 வரை நீட்டிப்பு அனுமதி | நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்கள் செயல்முறை உத்தரவு மூ.மு எண் 8269/10/ஜே 3 நாள் 21.03.2011 |

மேற்கண்ட 21 தூய்மைப்பணியாளர்கள் பணியிடங்களுக்கும் ஒவ்வொரு ஆண்டும் அனுமதியளித்தும் 01.10.2008 முதல் 30.09.2010 வரை நீட்டித்து வைத்துக்கொண்டமைக்கு பின்னேற்பும், 01.10.2010 முதல் 30.09.2011 வரை நீட்டித்து வைத்துக்கொள்ள அனுமதியளித்தும் நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்கள் செயல்முறை உத்தரவு மூ.மு எண் 8269/2010/ஜே3 நாள் 21.03.2011 ல் உத்தரவிடப்பட்டுள்ளது. இதன் பின்னர் 01.10.2011 முதல் 30.09.2021 வரை இப்பணியிடங்கள் நீட்டிப்பு செய்து கொண்டமைக்கு பின்னேற்பும், 01.10.2021 முதல் நிரந்தரமாக வைத்துக்கொள்ள அனுமதி வழங்க கோரி நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்கள் கடிதம். ந.க.எண். 3279/2020/பி3 நாள்.29.10.2021 இல் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு கருத்துரு அனுப்பப்பட்டு நிலுவையில் உள்ளது.

எனவே, மேற்படி 21 தூய்மைப் பணியாளர் பணியிடங்களை 01.10.2011 முதல் 30.09.2022 வரை நீட்டித்து வைத்து கொள்வதற்கு பின்னேற்பும், 01.10.2022 முதல் நிரந்தரமாக வைத்துக்கொள்ள அனுமதி வழங்க கோரியும் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு கருத்துரு அனுப்பவும் மன்றத்தின் அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :** மேற்படி பணியிடங்களுக்கு 01.10.2011 முதல் 30.09.2022 வரை நீட்டித்து கொள்வதற்கு பின்னேற்பும், 01.10.2022 முதல் இப்பணியிடங்களை நிரந்தரமாக வைத்துக்கொள்ள அனுமதி பெறவும் அதற்கான செலவினத்தை ஏற்கவும் மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**ஒப்புதல் அளிக்கப்பட்டது. மன்றத்தீர்மான எண்.161**

22. கோபிசெட்டிபாளையம் நகராட்சிக்கு சொந்தமான ஈப்பு வாகனம் TN 36 F 7005 –க்கு இன்ஜின் ஆயில் சர்வீஸ் , 4 வீல் பேரிங் மாற்றுதல் , பவர் ஸ்டியரிங் ராடு , பிரேக் லைனிங் , டீசல் பில்டர், ஆயில் பில்டர் மாற்றி வீல் பேலன்ஸ் செய்து தரும் பணிக்கு 24.06.2022 அன்று விலைப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

1. Gandhi motors . R.N.Pudur Erode – Rs.17920 /–
2. Mettupalayam Auo Service Center . Tiruppur – Rs.18900/–
3. Sri Murugan Autos , Vairapalayam .Erode – Rs.19650/–

மேற்படி வரப்பெற்ற விலைப்புள்ளிகளை இறுதி செய்திட மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது. (ந.கஎண்.1353/2022/இ1)

**அலுவலகக்குறிப்பு :**

வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி RS.17920 /–அளித்துள்ள M/s.Gandhi Motors . R.N.Pudur Erode அவர்களின் விலைப்புள்ளியினை அங்கீகரித்து பணிஉத்திரவு வழங்கலாம்.

**M/s Gandhi Motors – ன் குறைந்த விலைப்புள்ளி அங்கீகரிக்கப்பட்டது மன்றத்தீர்மான எண்.162**

23. கோபிசெட்டிபாளையம் நகராட்சியில் தூய்மை பணியாளர்களாக பணிபுரிந்து வயது முதிர்வின் காரணமாக 30.06.2022 அன்று கீழ்காணும் பணியாளர்கள் ஓய்வு பெற உள்ளார்கள். அரசாணை எண்.42 நிதி (ஓய்வூதியம்) நாள்.15.09.2000 இன் படி ஓய்வு பெற உள்ள பணியாளர்களுக்கு சிறப்பு சேம நல நிதி பங்குத்தொகை ரூ.10,000/- வழங்க ஆணையிடப்பட்டுள்ளது. எனவே, கீழ்காணும் தூய்மை பணியாளர்களுக்கு தலா ரூ.10000/- வீதம் 8 தூய்மை பணியாளர்களுக்கு ரூ.80000/- வழங்க மன்றத்தின் அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

| வ. எண் | தூய்மை பணியாளரின் பெயர் | பணி ஓய்வு பெறும் நாள் | சிறப்புச்சேமநல நிதி வேண்டி விண்ணப்பித்த நாள். |
|---|---|---|---|
| 1 | திரு.மாகாளி | 30.06.2022 | 06.05.2022 |
| 2 | திருமதி.பார்வதி | 30.06.2022 | 05.05.2022 |
| 3 | திருமதி.ராமாயீ | 30.06.2022 | 10.05.2022 |
| 4 | திருமதி.சென்னியம்மாள் | 30.06.2022 | 10.05.2022 |
| 5 | திரு.ஆர்.சுப்பிரமணியன் | 30.06.2022 | 10.05.2022 |
| 6 | திரு.கே.சுப்பிரமணியம் | 30.06.2022 | 09.05.2022 |
| 7 | திரு.அருணாச்சலம் | 30.06.2022 | 06.05.2022 |
| 8 | திருமதி. பாப்பாள் | 30.06.2022 | 12.05.2022 |

**ந.க.எண்.1146/2022/அ4**

**அலுவலக குறிப்பு :-** மன்றம் அனுமதிக்கலாம்.
**அனுமதிக்கப்பட்டது மன்றத்தீர்மான எண்.163**

24. கோபிசட்டிபாளையம் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.7 வடக்கு பார்க் வீதியில் நகராட்சிக்கு சொந்தமான பூங்காவில் உள்ள மரங்களின் கிளைகள் வளர்ந்து ஆபத்து ஏற்படுத்தும் நிலையில் உள்ளது. வர உள்ள பருவ மழை மற்றும் காற்று காரணமாக முறிந்து விழுந்தால் பொது மக்களுக்கு பாதிப்பு ஏற்படுத்தும். எனவே மேற்படி ஆபத்தான நிலையில் உள்ள மரங்களின் கிளைகளை மட்டும் பொது மக்கள் பாதுகாப்பு கருதி பொது ஏலம் மூலம் வெட்டி அகற்றிட மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :** மன்றம் அனுமதி வழங்கலாம்
**அனுமதிக்கப்பட்டது மன்றத்தீர்மான எண்.164**

25. கோபிசெட்டிபாளையம் நகராட்சி வார்டு எண்.3 இல் சின்னச்சாமி வீதி 5 வது தெரு மற்றும் 6 வது தெரு , செல்லப்பா நகர் பகுதியில் உள்ள சிறுமின் விசை பம்பிலிருந்து குழாய் நீட்டிப்பு செய்து தண்ணீர் வசதி செய்து தர ஆகும் மதிப்பீட்டு செலவினம் .ரூ,1,55,000 /- ஆகும். மேற்படி பணியினை மேற்கொள்ளவும் செலவினத்தை நகராட்சி குடிநீர் நிதியில் இருந்து செலவிடவும் மன்றத்தின் அனுமுதி கோரப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :** மன்றம் அனுமதி வழங்கலாம் .
**அனுமதிக்கப்பட்டது மன்றத்தீர்மான எண்.165**

26. கோபிசெட்டிபாளையம் நகராட்சி வார்டு எண்.4, விவேகானந்தர் வீதியிலிருந்து சின்னச்சாமி வீதி -1 பெரியக்கா வீதி. வார்டு எண்.6 , சதாசிவம் வீதி , தாசப்பன் வீதி ராமர் எக்ஸ்டன்சன் -2 ஆகிய பகுதிகளில் உள்ள சிறுமின் விசை பம்பிலிருந்து கூடுதலாக குழாய் நீட்டிப்பு செய்து தண்ணீர் வசதி செய்து தர ஆகும் மதிப்பீட்டு தொகை ரூ.1,50,000 /- (ரூபாய் ஒரு இலட்சத்து ஐம்பதாயிரம் மட்டும் ) . மேற்படி பணியினை மேற்கொள்ளவும் செலவினத்தை நகராட்சி பொது நிதியில் இருந்து செலவிடவும் மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.
**அலுவலகக்குறிப்பு :** மன்றம் அனுமதி வழங்கலாம் .
**அனுமதிக்கப்பட்டது மன்றத்தீர்மான எண்.166**

27. கோபிசெட்டிபாளையம் நகராட்சி வார்டு எண்.7 , கருமயா வீதி –1 மற்றும் கருமயா வீதி –2 ஆகிய பகுதிகளில் உள்ள சிறுமின்விசை பம்ப் –லிருந்து குழாய் நீட்டிப்பு செய்து தண்ணீர் வசதி செய்து தர ஆகும் மதிப்பீட்டு தொகை ரூ. 75,000/– (ரூபாய் எழுபத்தைந்தாயிரம் மட்டும் ) மேற்படி பணினை மேற்கொள்ளவும் , செலவினத்தை நகராட்சி குடிநீர் நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :** மன்றம் அனுமதி வழங்கலாம் .
**அனுமதிக்கப்பட்டது மன்றத்தீர்மான எண்.167**

28. கோபிசெட்டிபாளையம் நகராட்சி வார்டு எண்.8 , கருமயா வீதி–4, காமராஜ் வீதியிலிருந்து புதிய ஆஸ்பத்திரி வீதி, காமராஜ் வீதியிலிருந்து பதிவிலாஸ் வழியாக புதிய ஆஸ்பத்திரி வீதி சந்து வரை மங்கம்மாள் வீதியிலிருந்து நல்லமுத்து மாரியம்மன் கோவில் வரை வடக்கு பார்க் வீதியிலிருந்து வரதன் வீதி மேற்கு பகுதி , காமராஜ் வீதியிலிருந்து கிழக்கு பகுதி மற்றும் LIG காலணியில் இருந்து காரை சந்து வரை ஆகிய பகுதிகளில் உள்ள சிறுமின் விசை பம்பிலிருந்து குழாய் நீட்டிப்பு செய்து தண்ணீர் வசதி செய்து தர மதிப்பீட்டு செலவினம்.ரூ.2.25 இலட்சம் ஆகும். மேற்படி பணியினை மேற்கொள்ளவும் , செலவினத்தை நகராட்சி குடிநீர் நிதியில் இருந்து செலவிடவும் மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது. ,

**அலுவலகக்குறிப்பு :** மன்றம் அனுமதி வழங்கலாம் .
**அனுமதிக்கப்பட்டது மன்றத்தீர்மான எண்.168**

29. கோபிசெட்டிபாளையம் நகராட்சி வார்டு எண்.10 கன்னிகா பரமேஸ்வரி எக்ஸ்டன்சன் , வார்டு எண்.20 ராமசாமி வீதி , வார்டு எண்.26 , சீதாலட்சுமிபுரம் 2–வது வீதி, ஓடை வரை மற்றம் சிவசண்முகம் 2 –வது வீதி மற்றும் நந்தவனம் மாரியம்மன் கோவில் காரைசந்து வரை மேற்படி பகுதிகளில் இருக்கும் சிறுமின்விசை பம்ப் –களில் இருந்து குழாய் நீட்டிப்பு செய்து தண்ணீர் வசதி செய்து தர ஆகும் மதிப்பீட்டு தொகை ரூ.1,00,000/– (ரூபாய் ஒரு இலட்சம் மட்டும் ) மேற்படி பணியினை மேற்கொள்ளவும் , செலவினத்தை நகராட்சி குடிநீர் நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :** மன்றம் அனுமதி வழங்கலாம் .
**அனுமதிக்கப்பட்டது மன்றத்தீர்மான எண்.169**

30. கோபிசெட்டிபாளையம் நகராட்சி வார்டு எண்.19, குப்பாண்டார் வீதி –1 முதல் 4 வரை மற்றும் கோகுலம் நகர் பகுதியில் உள்ள சிறுமின்விசை பம்பிலிருந்து குழாய் நீட்டிப்பு செய்து தண்ணீர் வசதி செய்ய ஆகும் மதிப்பீட்டு தொகை ரூ.1.25 இலட்சம் (ரூபாய் ஒரு இலட்சத்து இருப்பத்தைந்தாயிரம் மட்டும் ) மேற்படி பணியினை மேற்கொள்ளவும் , செலவினத்தை நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :** மன்றம் அனுமதி வழங்கலாம் .
**அனுமதிக்கப்பட்டது மன்றத்தீர்மான எண்.170**

31. கோபிசெட்டிபாளையம் நகராட்சி வார்டு எண்.21 காமாட்சியம்மன் கோவில் வீதி , SDN காலணி குறுக்கு தெரு மணிமேகலை வீதி ஆகிய பகுதிகளில் உள்ள சிறுமின் விசை பம்ப் –லிருந்து குழாய் நீட்டிப்பு செய்து தண்ணீர் வசதி செய்து தர ஆகும் மதிப்பீட்டு தொகை .ரூ.1.00 இலட்சம் .(ரூபாய் ஒரு இலட்சம் மட்டும் ) . மேற்படி பணியினை மேற்கொள்ளவும் , செலவினத்தை நகராட்சி குடிநீர் நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :** மன்றம் அனுமதி வழங்கலாம் .
**அனுமதிக்கப்பட்டது மன்றத்தீர்மான எண்.171**

32. கோபிசெட்டிபாளையம் நகராட்சி வார்டு எண்.26 , சிவசண்முகம் வீதி 2 வது தெருவில் உள்ள கைபம்ப் –பினை அகற்றி சிறுமின்விசை பம்ப் –ஆக மாற்றம் செய்து அருகில் உள்ள பழுதடைந்த தண்ணீர் தொட்டியை (Syntex Tank ) மாற்றிவிட்டு புதிய Syntex Tank அமைத்திட ஆகும் செலவினம் ரூ.1.50 இலட்சம் (ரூபாய் ஒரு இலட்சத்து ஐம்பதாயிரம் மட்டும் ) .மேற்படி பணியினை மேற்கொள்ளவும் செலவினத்தை நகராட்சி குடிநீர் நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :** மன்றம் அனுமதி வழங்கலாம் .
**அனுமதிக்கப்பட்டது மன்றத்தீர்மான எண்.172**

33. கோபிசெட்டிபாளையம் நகராட்சி வார்டு எண்.28 வேலப்பன் வீதி , சுப்பிரமணியன் வீதி ஆகிய பகுதிகளில் உள்ள சிறுமின் விசை பம்ப் –லிருந்து குழாய் நீட்டிப்பு செய்து பொது மக்களுக்கு தண்ணீர் வசதி செய்து தர ஆகும் மதிப்பீட்டு செலவினம் ரூ.75,000 /– ஆகும். மேற்படி பணியினை மேற்கொள்ளவும் செலவினத்தை நகராட்சி குடிநீர் நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :** மன்றம் அனுமதி வழங்கலாம்
**அனுமதிக்கப்பட்டது மன்றத்தீர்மான எண்.173**

34. கோபிசெட்டிபாளையம் நகராட்சி வார்டு எண்.30 பஜனை கோவில் வீதி –3 இல் உள்ள சிறுமின்விசை பம்பிலிருந்து கிழக்கு மற்றும் மேற்கு நோக்கி குழாய் நீட்டிப்பு செய்து தண்ணீர் வசதி செய்ய ஆகும் மதிப்பீட்டு தொகை ரூ.50,000 (ரூபாய் ஐம்பதாயிரம் மட்டும்) மேற்படி பணியினை மேற்கொள்ளவும் செலவினத்தை நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :** மன்றம் அனுமதி வழங்கலாம்
**அனுமதிக்கப்பட்டது மன்றத்தீர்மான எண்.174**

35. கோபிசெட்டிபாளையம் நகராட்சி எல்லைக்குட்பட்ட கீழ்கண்டுள்ள பகுதிகளில் ,

1. சத்தி –ஈரோடு சாலையில் அர்பன் பேங்க் அருகில்
2. குப்பாண்டார் வீதி கிணறு அருகில்
3. நஞ்சகவுண்டன்பாளையம் (விவசாய அலுவலகம் அருகில்)
4. நஞ்சகவுண்டன்பாளையம் மற்றும் NRP நகர் சாலை சந்திக்கும் இடம்

ஆகிய பகுதிகளில் சுவீஸ் வால்வு தொட்டி மற்றும் மூடுகற்கள் (Slab) புதிதாக அமைக்கப்பட வேண்டியுள்ளது. இதற்கு மதிப்பீட்டு தொகை ரூ.2.00 இலட்சம் (ரூபாய் இரண்டு இலட்சம் மட்டும் )

மேற்படி பணியினை மேறகொள்ளவும் , செலவினத்தை நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :** மன்றம் அனுமதி வழங்கலாம்
**அனுமதிக்கப்பட்டது மன்றத்தீர்மான எண்.175**

36. கோபிசெட்டிபாளையம் நகராட்சி வார்டு எண்.18 மாரியம்மன் கோவில் தெரு , வார்டு எண்.15 கபிலர் வீதி, வார்டு எண்.26 சிவசண்முகம் வீதி 2 வது தெருவில் உள் சிறுமின் விசை பம்பு தண்ணீர் தொட்டிகள் பழுதடைந்த நிலையில் உள்ளது. எனவே புதிய HDPE Tank அமைக்கப்பட்டு தண்ணீர் வசதி தடையின்றி கிடைக்க செய்யப்பட வேண்டியுள்ளது. இதற்கு மதிப்பட்டு செலவினம் ரூ.50,000/– ஆகும். மேற்படி பணியினை மேற்கொள்ளவும் செலவினத்தை நகராட்சி குடிநீர் நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :** மன்றம் அனுமதி வழங்கலாம்
**அனுமதிக்கப்பட்டது மன்றத்தீர்மான எண்.176**

37. கோபிசெட்டிபாளையம் நகராட்சி வார்டு எண்.26 சிவசண்முகம் வீதி–2 வது தெரு சிறுமின் விசை பம்ப் மின் இணைப்பு பெட்டி , வார்டு எண்.25 ஜின்னிங் பேக்டரி வீதி , சிறுமின் விசை பம்ப் மின் இணைப்பு பெட்டி, வார்டு எண்.18 கொமரப்பன் வீதி கழிப்பிடத்தில் மின் இணைப்பு பெட்டி ஆகியவை இரும்பு தகரத்தால் உள்ளது. மேற்படி மின் இணைப்பு பெட்டி பழுதடைந்து பொது மக்கள் மின் மோட்டாரை இயக்கும் போது ஆபத்து ஏற்படுத்தும் நிலையில் உள்ளது. எனவே புதியதாக மின் இணைப்பு அறை அமைக்கவும் , வார்டு எண்.17 கமலா ரைஸ் மில் வீதி சிறுமின்விசை பம்ப் மீட்டர் அறை உடைந்து ஆபத்தான நிலையில் உள்ளது. அதற்கும் புதிய மின் மோட்டார் அறை அமைக்கப்பட வேண்டியுள்ளது. மேற்படி பணிகளுக்கு மதிப்பீட்டு செலவினம் ரு.2.00 இலட்சம் ஆகும்.(ரூபாய் இரண்டு இலட்சம் மட்டும் ) மேற்படி பணியினை மேற்கொள்ளவும் செலவினத்தை நகராட்சி குடிநீர் நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :** மன்றம் அனுமதி வழங்கலாம்
**அனுமதிக்கப்பட்டது மன்றத்தீர்மான எண்.177**

38. கோபிசெட்டிபாளையம் நகராட்சியின் வார்டு எண்.17 இல் கரட்டூரில் இயங்கி வரும் வளமீட்பு மையத்தில் (RRC) பிளாஸ்டிக் கழிவுகளை பேலிங் செய்ய பயன்படுத்தி வரும் இயந்திரத்தில் LOADER SOFT பழுதடைந்ததை மாற்றி புதியதாக LOADER SOFT கொள்முதல் செய்து பொருத்தி தொடர்ந்து பணி மேற்கொள்ளவும், அதற்காகும் உத்தேச செலவினம் ரூ.10,000/–க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.( ந.க.எண்.834/2022/எச்1)

**அலுவலகக்குறிப்பு:** 1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. இதற்கான செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்க்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**அலுவலக குறிப்பு 1 மற்றும் 2 அனுமதிக்கப்பட்டது மன்றத்தீர்மான எண்.178**

39. இந்நகராட்சிக்கு சொந்தமான வாகன எண். TN 36 J 2724 இன் தகுதி சான்று காலம் 15.06.2022 ஆம் தேதியுடன் முடிவடைகிறது. இவ்வாகனத்தில் ஏற்பட்டுள்ள பழுதுகளை செப்பணிட்டு தகுதி சான்று புதுப்பிக்க ஆகும் செலவினங்களுக்கு மன்றத்தீர்மானம் எண்.108 நாள்.30.05.2022 இல் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. எனவே மேற்படி வாகனம் பழுது நீக்கம் செய்வதற்கு 16.06.2022 இல் ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டது வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | நிறுவனங்கயின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி தொகை .(ரூ) |
|---|---|---|
| 1. | காந்தி மோட்டார்1 , கே.கே.கார்டன் , சி.எம்.நகர் , கே.கே எஸ்.கே லெதர் பேப்டரி ஆர் ,என் புதூர்,ஈரோடு | 1,38,700/– |
| 2. | மேட்டுப்பாளையம் ஆட்டோ சர்வீஸ் சென்டர் ,1.ராஜா நகர் , போயம்பாளையம் திருப்பூர் | 1,39,950/– |

மேற்கண்டவாறு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் ரூ.1,38,700/– அளித்துள்ள வரிசை எண்.1 இல் குறிப்பிடப்பட்டுள்ள நிறுவனமான காந்தி மோட்டார்ஸ் , கே.கே.கார்டன் , சி.எம்.நகர் , கே.கே எஸ்.கே லெதர் பேக்டரி ஆர்.என்.புதூர் .ஈரோடு 638 005 பணிமனைகளில் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம் . (ந.கஎண்.1174/2022/எச் 1)

**அலுவலகக்குறிப்பு :** மன்றம் அனுமதி வழங்கலாம் .

**காந்தி மோட்டார்ஸ் – ன் குறைந்த ஒப்பந்தப்புள்ளி ஏற்றுக்கொள்ளப்பட்டது**

**மன்றத்தீர்மான எண்.179**

40. கோபிசெட்டிபாளையம் நகராட்சியின் வார்டு எண்.17 இல் கரட்டூரில் இயங்கி வரும் வளமீட்பு மையத்தில் (RRC) பிளாஸ்டிக் கழிவுகளை பேலிங் செய்ய பயன்படுத்தி வரும் இயந்திரத்தில் LOADER SOFT பழுதடைந்ததை மாற்றி புதியதாக LOADER SOFT பொருந்தும் பணிக்கு 10.06.2022 ஆம் தேதி விலைப்புள்ளிகள் பெறப்பட்டது.

பெறப்பட்ட விலைப்புள்ளிகளின் விபரம்

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | தொகை |
|---|---|---|
| 1. | ஸ்ரீமகாலட்சுமி ஒர்க்ஷாப் 749 ஊத்துக்குளி ரோடு, குன்னத்தூர் | ரூ.9840/– |
| 2. | ஸ்ரீ பழனி ஆண்டவர் ஹைட்ராலிக் ஒர்க்ஸ், 13/24–C, பெருமாநல்லூர் ரோடு, குன்னத்தூர் | ரூ.9912/– |
| 3. | ஸ்ரீ கஜலட்சுமி இண்டஸ்ட்ரீஸ், 88/162, கருங்கல் ரோடு, குன்னத்தூர் | ரூ.9970/– |

மேற்படி வரிசை எண் 1 இல் கண்டுள்ள ஸ்ரீ மகாலட்சுமி ஒர்க்ஷாப்,749 ஊத்துகுளி ரோடு, கோபிசெட்டிபாளையம் அவர்களின் விலைப்புள்ளி விலைவிகிதம் மற்ற இரண்டையும் விட குறைவாக உள்ளதால் அதனை மன்றம் ஏற்கலாம். (ந.க.எண்.834/2022/எச்1)

**அலுவலகக்குறிப்பு:** 1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி மேற்க்கொண்டதை மன்றம் ஏற்கலாம்.

**அலுவலக குறிப்பு 1 மற்றும் 2 அனுமதிக்கப்பட்டது மன்றத்தீர்மான எண்.180**

41. கோபிசெட்டிபாளையம் நகராட்சிக்கு சொந்தமான மொடச்சூர் மேல்நிலைப்பள்ளியில் தற்போது தரைதளத்தில் '3' வகுப்பறைகளுக்கான கட்டிடம் கட்டப்பட்டு வருகிறது, மேற்படி கூடுதல் வகுப்பறை கட்டிட ஆய்வில் நகர்மன்றத்தலைவர் அவர்களின் ஆலோசனைப்படி அக்கட்டிடத்தின்

முதல் தளத்தில் மேலும் 3 வகுப்பறை கட்டிடம் மாணவ மாணவியர் நலன் கருதி கட்டுவதற்கு மதிப்பீட்டு செலவனம் ரூ.20.00 இலட்சம் (ரூபாய் இருபது இலட்சம் மட்டும் ) ஆகும். மேற்படி பணியினை மேற்கொள்ளவும், செலவினத்தை நகராட்சி கல்வி நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :** மன்றம் அனுமதி வழங்கலாம் .
**அனுமதிக்கப்பட்டது மன்றத்தீர்மான எண்.181**

42. வேங்கம்மையார் உயர்நிலைப்பள்ளியின் தலைமை ஆசிரியர் , தற்போது பள்ளியில் பயிலும் மாணவ மாணவியரின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதால் கூடுதலாக 3 வகுப்பறைகள் கோரியுள்ளார். அதற்கிணங்க மேற்படி பள்ளியின் உட்புறம் ஏற்கனவே தரைதளத்தில் உள்ள பழைய 3 வகுப்பறை கட்டிடத்தின் முதல் தளத்தில் 3 வகுப்பறைகள் கட்டுவதற்கு மதிப்பீட்டு செலவினம் ரூ.20.00 (இருபது இலட்சம் மட்டும்). மேற்படி பணியினை மேற்கொள்ளவும் செலவினத்தை நகராட்சி கல்வி நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :** மன்றம் அனுமதி வழங்கலாம் .
**அனுமதிக்கப்பட்டது மன்றத்தீர்மான எண்.182**

43. கோபிசெட்டிபாளையம் நகராட்சி வார்டு எண்.12 ஸ்ரீநகர் காரை சந்து சிறுமின் விசை பம்பிலிருந்து ஸ்ரீநகர் பூங்கா வரை குழாய் நீட்டிப்பு செய்து தண்ணீர் வசதி செய்யப்பட வேண்டியுள்ளது. இப்பணிக்கு மதிப்பீட்டு தொகை . ரூ.60,000/− (ரூபாய் அறுபதாயிரம் மட்டும்) ஆகும், மேற்படி பணியினை மேற்கொள்ளவும் செலவினத்தை நகராட்சி குடிநீர் நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :** மன்றம் அனுமதி வழங்கலாம் .
**அனுமதிக்கப்பட்டது மன்றத்தீர்மான எண்.183**

44. இந்நகராட்சி பகுதியில் கரட்டூரில் அமைந்துள்ள RRC யின் முன்புறத்தில் கொட்டப்பட்டுள்ள கழிவுகளை அப்புறப்படுத்தி அங்குள்ள உயிரி எரிவாயு கூடத்தினை சுற்றியும் உள்ள செடி, கொடிகள், முட்புதர்கள் போன்றவற்றினை JCB வாகனம் கொண்டு சுத்தம் செய்து பணிமேற்கொள்ளவும், மேலும், ராமர் எக்ஸ்டென்சன் பகுதியில் அமைந்துள்ள மயானம் மற்றும் நுண் உரமாக்குதல் மையம் பகுதியை ஒட்டி உள்ள பகுதியில் செடிகள் மற்றும் முட்புதர்களை அகற்றி உலர் கழிவுகள் மயானம் பகுதிக்கு செல்லாதவாறு பச்சைவலை மற்றும் 15 எண்ணிக்கை மூங்கில் குச்சிகளை கொள்முதல் செய்து பணி மேற்கொள்ளும் பணிக்கு ஏற்கனவே மன்றம் தீர்மானம் எண். 102 நாள். 30.05.2022 இல் ஒப்புதல் வழங்கி உள்ளது. இப்பணிக்கு 22.06.2022 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது. பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | நிறுவனத்தின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதம் (ரூ.) |
|---|---|---|
| 1. | எக்ஸ்போஸிவ் என்டர் பிரைசஸ்<br>12, பி.எம்.கே. ரைஸ் மில் வீதி,<br>புதுப்பாளையம்,<br>கோபிசெட்டிபாளையம் | 1. JCB பணி – ரூ. 1100/− (Per hour)<br>2. பச்சைவலை – ரூ. 64/− (2 மீ X 1 மீ) |
| 2. | சசிகலா எலக்ட்ரிக்கல் ஒர்க்ஸ்,<br>12, கச்சேரி வீதி,<br>கோபிசெட்டிபாளையம் | 1. JCB பணி – ரூ. 1150/− (Per hour)<br>2. பச்சைவலை – ரூ. 70/− (2 மீ X 1 மீ) |

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதங்களில் வரிசை எண்.1 இல் குறிப்பிடப்பட்டுள்ள M/s. எக்ஸ்போஸிவ் என்டர் பிரைசஸ், 12, பி.எம்.கே. ரைஸ் மில் வீதி, புதுப்பாளையம், கோபிசெட்டிபாளையம் நிறுவனத்தின் விலைவிகிதம் மற்றொன்றைவிட குறைவாக உள்ளதால் அதனை மன்றம் ஏற்கலாம். (**ந.க.எண்.1086/2022/எச் 1)**

**அலுவலகக் குறிப்பு** :மன்றம் அனுமதிக்கலாம்.
**வரிசை எண்.1 எக்ஸ்போஸிவ் என்டர்பிரைசஸ் –ன் குறைந்த விலைவிகிதம் ஏற்றுக்கொள்ளப்பட்டது. மன்றத்தீர்மான எண்.184**

45. கோபிசெட்டிபாளையம் நகராட்சிக்கு சொந்தமான குத்தகை இனங்கள், கடைகள் மற்றும் காலியிடங்கள் குத்தகைக்கு விடப்படுவதன் மூலம் வசூல் செய்யப்படும் வாடகை தொகைக்குண்டான சேவை வரி மற்றும் வருமான வரி ஆகியவற்றை உரிய அரசு தலைப்பில் செலுத்தப்படுவதற்காக நகராட்சி ஆடிட்டர் திரு.எஸ்.சக்திவேல் அவர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்கள். மேற்படி சேவை வரி மற்றும் வருமான வரி ஆகியவற்றை உரிய அரசு தலைப்பில் செலுத்தி, அதற்காக கணக்குகளை அந்தந்த துறைகளில் பதிவு (ONLINE RETURN FILE PROCESS) செய்ய 2020–2021, 2021–2022 மற்றும் 2022–2023 ம் ஆண்டிற்கான நகராட்சி ஆடிட்டர் கட்டணமாக உத்தேச செலவினம் ரூ.50,000/– (ரூ.ஐம்பதாயிரம் மட்டும்) நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண். 9108/2008/அ3)

**அலுவலக குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.
**அனுமதிக்கப்பட்டது மன்றத்தீர்மான எண்.185**

46. நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள சாலையோர வியாபாரிகளின் சமூக பாதுகாப்பு மற்றும் வாழ்வாதாரத்தை உறுதி செய்திட நடப்பாண்டில் புதிய கணக்கெடுப்பு நடத்தப்பட்டு அடையாள அட்டை மற்றும் வியாபார சான்று வழங்க கீழ்காணும் அட்டவணைப்படி நடவடிக்கை மேற்கொள்ளுமாறு நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்கள் கடிதம் ந.க.எண்.20789/2021/UPA1 நாள்.16.06.2022 இல் அறிவுறுத்தப்பட்டுள்ளது. கீழ்காணும் விபரப்படி ஒப்பந்தப்புள்ளி கோரியதையும், நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதையும் மன்றத்தின் அங்கீகாரத்திற்காக வைக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 1 | ஒப்பந்தப்புள்ளி அழைப்பு நாள் | 20.06.2022 |
| 2 | ஒப்பந்தப்புள்ளி இறுதி செய்யும் நாள் (15 நாள்) | 04.07.2022 |
| 3 | வேலை உத்திரவு வழங்க வேண்டிய நாள் | 05.07.2022 |
| 4 | நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு அறிக்கை அனுப்ப வேண்டிய நாள் | 05.07.2022 |
| 5 | கணக்கெடுப்பு துவங்கப்பட வேண்டிய நாள் (30 நாட்கள்) | 07.07.2022 |
| 6 | கணக்கெடுப்பு முடிக்கப்பட வேண்டிய நாள் (30 நாட்கள்) | 07.08.2022 |
| 7 | சாலையோர வியாபாரிகளுக்கு அடையாள அட்டை மற்றும் வியாபாரச்சான்று வழங்குதல் (9 நாட்கள்) | 15.08.2022 |

ந.க.எண்.1378/2022/எப்1

**அலுவலக குறிப்பு:–**

1. மேற்காணும் விபரப்படி ஒப்பந்தப்புள்ளி கோர நகர்மன்றத்தின் அனுமதி பெறுவதற்கு கால அவகாசம் இல்லாததால் அவசர அவசியம் கருதி நகர்மன்ற அனுமதியை

எதிர்நோக்கி நகர்மன்றத்தலைவர் முன் அனுமதியுடன் ஒப்பந்தப்புள்ளி கோரியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

2. மேற்காணும் ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பினை மாநில அளவிலான தினசரி நாளிதழில் விளம்பரம் செய்தமைக்கு உத்தேச செலவினம் ரூ.20,000/- (ரூபாய் இருபதாயிரம் மட்டும்) ற்கு மன்றம் அனுமதிக்கலாம்.

**அலுவலக குறிப்பு 1. அங்கீகரிக்கப்பட்டது.**
**2. உத்தேச செலவினம் ரூபாய் இருபதாயிரம் மட்டும் அனுமதிக்கப்பட்டது**
**மன்றத்தீர்மான எண்.186**

47. கோபிசெட்டிபாளையம் நகராட்சிக்கு சொந்தமான அம்மா உணவகத்தில் பணபுரியும் பணியாளர்களுக்கு 2021 – 2022 ஆம் ஆண்டிற்கு EPFO, ESI Online இல் செலுத்தப்பட்டு இரசீதுகள் வழங்கியமைக்கு திரு. S. ஈஸ்வரமூர்த்தி HR ஆலோசகர், ஈரோடு அவர்களுக்கு தொகை ரூ. 18,000/- ஐ வழங்க மன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது. (**ந.க.எண்**. 997/2020/எச் 1)

**அலுவலகக் குறிப்பு** : 1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்க்கொள்ளலாம்

**அலுவலக குறிப்பு 1 மற்றும் 2 அனுமதிக்கப்பட்டது மன்றத்தீர்மான எண்.187**

48. கோபிசெட்டிபாளையம் நகராட்சி பகுதிகளில் தூய்மைப் பணிகள் மேற்க்கொள்ள அரசாணை எண். 101 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 30.04.1997 இல் தெரிவிக்கப்பட்ட அளவுகோல் படி தேவையான தூய்மைப் பணியாளர்களின் எண்ணிக்கை 254 ஆகும். இந்நிலையில் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடித ந.க.எண். K.dis. 28369/J3 நாள். 04.12.2018 இல் நிரந்தர தூய்மை பணியாளர்கள் 118 நபர்கள் இந்நகராட்சிக்கு இருந்த நிலையில் வெளிப்பணி ஒப்படைப்பு முறையில் இந்நகராட்சிக்கு 108 பணியாளர்களை புற ஆதார முறையில் எடுத்துக் கொள்ள முதன்மை அனுமதி வழங்கப்பட்டு ஒப்பந்தப்புள்ளி அடிப்படையில் தூய்மைப் பணியாளர்களை ஒப்பந்ததாரரிடம் பெற்று தற்போது பணி மேற்க்கொள்ளப்பட்டு வருகிறது.

இந்நிலையில் மேற்காணும் விபரப்படி நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் அனுமதி வழங்கிய காலத்திற்கு பின்பு 01.07.2022 ஆம் தேதியன்று தூய்மைப் பணியாளர்களின் எண்ணிக்கை குறித்த கணக்கீடு பின்வருமாறு.

| விபரம் | நிரந்தர தூய்மைப் பணியாளர்களின் எண்ணிக்கை | வெளிப்பணி ஒப்படைப்பு முறைக்கு | மொத்தம் |
|---|---|---|---|
| நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் 04.12.2018 ஆம் தேதியிட்ட முதன்மை அனுமதியின்படி இந்நகராட்சிக்கு அனுமதிக்கப்பட்ட தூய்மைப் பணியாளர்களின் எண்ணிக்கை | 118 | 108 | 226 |
| வரும் 01.07.2022 ஆம் தேதியன்று பணியில் உள்ளவர்களின் எண்ணிக்கை (30.06.2022 அன்று தூய்மைப் பணியாளர்கள் ஓய்வு பெற உள்ளது உட்பட) | 89 | 122 | 211 |
| எனவே, பற்றாக்குறை பணியாளர்களின் எண்ணிக்கை | | | **15** |

இந்நிலையில் மேற்க்குறிப்பிட்ட நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் முதன்மை அனுமதி கடித எண் K.dis. 28363/J3 நாள். 04.12.2018 இல் முதன்மை அனுமதி பெறப்பட்ட நாளுக்கு பின்பு நிரந்தர பணியாளர் பணியிடங்களில் காலிப்பணியிடங்கள் ஏற்படும் பொழுது அந்த எண்ணிக்கையிலான பணியிடங்களை கணக்கிட்டு புற ஆதார முறையில் (Out Sourcing Basis) ஒப்பந்த அடிப்படையில் தற்போது பணியாளர்களை வழங்கி வரும் ஒப்பந்ததாரரிடம் பெற்று பணி மேற்க்கொள்ள தெரிவித்து அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் 01.07.2022 ஆம் தேதியில் நிரந்தர தூய்மைப் பணியாளர்களின் பணியிடங்கள் 89 மட்டுமே. 15 தூய்மைப் பணியாளர்கள் பற்றாக்குறையாக இருக்கும் பட்சத்தில் பொது சுகாதார பணிகளான உயிரி எரிவாயு கலனிற்கு எடுத்துச் சென்று அறிவியல் முறைப்படி இறுதியாக்கம் (Scientific Disposal of Garbage) செய்து திடக்கழிவு மேலாண்மை பணிகளை 100% முழுமையாக செய்ய இயலாத நிலை ஏற்படும் என்பதாலும், தற்போது NGT வழிகாட்டுதல் படி அனைத்து கழிவுகளையும் அறிவியல் முறைப்படி (Scientific Disposal of Garbage) அப்புறப்படுத்த வேண்டியதன் அவசயிம் கருதியும் 15 பணியாளர்களை தற்போது புற ஆதார முறையில் பணியாளர்களை விநியோகம் செய்து வரும் நிறுவனமான M/s. S.S. Engineerrs, Coimbatore அவர்களிடம் 01.07.2022 முதல் 31.08.2022 வரையிலான இரண்டு மாத காலத்திற்கு தூய்மைப் பணியாளர்களை பெற்று தொடர்ந்து தூய்மைப் பணிகளை நல்ல முறையில் மேற்க்கொள்ளவும், நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கான ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதம் ரூ. 690/- இல் பணி மேற்க்கொள்ளவும், இப்பணிக்கான செலவினம் ரூ. 9.32 இலட்சத்திற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** : மன்றம் அனுமதிக்கலாம்.

**தனித்தனியாக கால நீட்டிப்புச் செய்யாமல் மறு ஒப்பந்தபுள்ளி கோர அனுமதிக்கப்பட்டது.**
**மன்றத்தீர்மான எண்.188**

49. கோபிசெட்டிபாளையம் நகராட்சிக்கு சொந்தமான நகராட்சி ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில் உள்ள கட்டிடத்தில் புதியதாக மின் விசிறி , மின் விளக்குகள் மற்றும் அதற்கான ஒயரிங் மற்றும் பழைய ஜன்னல்கள் பழுதை சரிசெய்ய வேண்டியுள்ளது. புதியாதாக மின் வசதிகள் மற்றும் ஜன்னல்கன் சரிசெய்ய ஆகும் மதிப்பீட்டு தொகை ரூ.30,000 /- ஆகும் .இப்பணியினை மேற்கொள்ளவும் செலவினத்தை நகராட்சி கல்வி நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :** மன்றம் அனுமதி வழங்கலாம்
**அனுமதிக்கப்பட்டது மன்றத்தீர்மான எண்.189**

50. இந்நகராட்சியில் கீழ்கண்டுள்ள பணிகளை செய்வதற்கு 22.06.2022 ஆம் தேதியில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழே குறிப்பிட்டுள்ளவாறு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை ரூ. | ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர் பெயர் விபரம் | கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் |
|---|---|---|---|---|
| 1. | கோபிசெட்டிபாளையம் நகராட்சிக்கு சொந்தமான தலைமை நீரேற்று நிலையத்தில் | 9,30,000 | M/s. **ஸ்ரீநிகேதா எண்டர்பிரைசஸ் சித்தோடு** | 0.29 சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு |

| | | | | |
|---|---|---|---|---|
| | குடிநீரை சுத்திகரிப்பு செய்திட குளோரின் கேஸ் சிலிண்டர் 2022-2023 ஆம் ஆண்டு பராமரிப்பு முறையில் விநியோகம் செய்தல் | | M/s. ஸ்ரீதரன் கெமிக்கல்ஸ் சித்தோடு | 2.21 சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம் |
| 2. | கோபிசெட்டிபாளையம் நகராட்சியில் உள்ள 30 வார்டுகளிலும் சுமார் 250 எண்ணம் சிறுமின் விசை ஆழ்குழாய் கிணறுகள் மின் மோட்டார்கள் 1.00HP முதல் 5.00 HP பழுது சரிசெய்யும் பணி | 9,00,000 | **M/s. எக்ஸ் புளோசிவ் எண்டர்பிரைசஸ் , ஒப்பந்ததாரர்** | 0.25 சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு |
| | | | V.தங்கராஜ் ஒப்பந்ததாரர் | 1.32 சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம் |
| 3. | கோபிசெட்டிபாளையம் நகராட்சி வார்டு எண்.11 பூரணி நகர் மேல் நீர்த்தேக்கத்தொட்டிக்கு புதிதாக -20 HP Openwell Submergible மின் மோட்டார் விநியோகம் செய்து மின் மோட்டார் பொருத்தி தரும் பணி | 1,30,000 | **M/s. எக்ஸ் புளோசிவ் எண்டர்பிரைசஸ் , ஒப்பந்ததாரர்** | 0.15 சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு |
| | | | V.தங்கராஜ் ஒப்பந்ததாரர் | 1.06 சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம் |

ந.க.எண். 1308 / 2022/இ1

**அலுவலகக்குறிப்பு :-**

.மன்றம் அனுமதிக்கலாம் .

1. மேற்படி பணிகளில் வ.எண்.1 -க்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் அளித்துள்ள M/s. **ஸ்ரீநிகேதா எண்டர்பிரைசஸ்** அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.
2. மேற்படி பணிகளில் வ.எண்.2 -க்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் அளித்துள்ள M/s. **எக்ஸ் புளோசிவ் எண்டர்பிரைசஸ்** அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.
3. மேற்படி பணிகளில் வ.எண்.3 -க்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் அளித்துள்ள M/s. **எக்ஸ் புளோசிவ் எண்டர்பிரைசஸ்** அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.

**அலுவலக குறிப்பு வரிசை எண்:1 ஸ்ரீ நிகேதா -ன் குறைந்த ஒப்பந்தப்புள்ளி ஏற்றுக்கொள்ளப்பட்டது. வரிசை எண்.2 மற்றும் 3 க்கு M/s எக்ஸ்புளோசிவ் என்டர்பிரைசஸ் -ன் குறைந்த ஒப்பந்தப்புள்ளி ஏற்றுக்கொள்ளப்பட்டது. மன்றத்தீர்மான எண்.190**

51. கோபிசெட்டிபாளையம் நகராட்சிக்கு சொந்தமான முருகன்புதூர் நகராட்சி பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் புதியதாக அமைக்கப்பட்ட வகுப்பு அறைகள் கட்டிடத்தில் தரை ஓடுகள், கைப்பிடிகள் சரிவு தளம் மற்றும் மின் வசதிகள் செய்ய வேண்டியுள்ளது. மேற்படி பணிக்கு ஆகும் மதீப்பீட்டு செலவினம் ரூ.1.90 இலட்சம் ஆகும். இப்பணியினை மேற்கொள்ளவும் செலவினத்தை நகராட்சி கல்வி நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :** மன்றம் அனுமதி வழங்கலாம்
**அனுமதிக்கப்பட்டது மன்றத்தீர்மான எண்.191**

52. நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களால் ந.க.எண்.11919/2022/CFC . நாள்.15.05.2022 ம் தேதிய கடிதத்தின் படி கோபிசெட்டிபாளையம் நகராட்சிக்கு 15 வது நிதிக்குழு மானியம் 2022-2023 ம் ஆண்டிற்கு Tied Grant ரூ.94.00 இலட்சம் ,Untied Grant ரூ.62.00 இலட்சம் ஆக மொத்தம் ரூ.1.56 கோடி (அல்லது 156.00இலட்சம்) நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் எடுத்து பிரேரணை அனுப்ப கோரப்பட்டுள்ளது.

Tied Grant

50% சுகாதாரம் , திடக்கழிவு மேலாண்மை , 50% குடிநீர் , மழைநீர் சேகரிப்பு மற்றும் நீர் மறுசுழற்சி பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டும் .

தற்பொது ரூ.94.00 இலட்சத்தில் 50% சுகாதாரம் , திடக்கழிவு மேலாண்மைக்குரிய பணிகளுக்கு ரூ.47.00 இலட்சத்திற்கு கீழ்கண்ட பணிகள் 15th CFC 2022-2023 மேற்கொள்ளலாம்.

| வ.எண் | பணியின்பெயர் | மதிப்பிட்டு தொகை ரூ.இலட்சத்தில் |
|---|---|---|
| 1. | கோபிசெட்டிபாளையம் நகராட்சி ராமர் எக்ஸ்டன்சன் வார்டு எண்.2 இல் கூடுதல் 1 TPD திறன் கொண்ட நுண் உரம் செயலாக்க மையம் ( MCC) கட்டுதல் மற்றும் சுற்றுச்சுவர் கட்டுதல் | ரூ.25.00 |
| 2. | கோபிசெட்டிபாளையம் நகராட்சி கரட்டூர் உரக்கிடங்கு அருகில் Resource recovery center (RRC) கட்டுதல் | ரூ.12.00 |
| 3. | கோபிசெட்டிபாளையம் நகராட்சிக்கு சொந்தமான கரட்டூர் உரக்கிடங்கில் சுற்றுச்சுவர், கேட் அமைத்து வாகனம் நிறுத்தும் இடம் கட்டுதல் (Bio methanation plant எதிரில் ) | ரூ.10.00 |
| | மொத்தம் | ரூ.47.00 |

Tied Grant 50% குடிநீர் , மழைநீர் சேகரிப்பு மற்றும் நீர் மறுசுழற்சி பணிகள் (ரூ.47.00 இலட்சம் )

| **வ.எண்** | **பணியின்பெயர்** | **மதிப்பிட்டு தொகை ரூ.இலட்சத்தில்** |
|---|---|---|
| 1. | கோபிசெட்டிபாளையம் நகராட்சி வார்டு எண்.28 (ராஜன் நகர்) கிழக்கு தேர் வீதியில் புதிய ஆழ்குழாய் கிணறு அமைத்து சிறுமின் விசை பம்ப் அமைத்தல், வேலப்பன் வீதி ஆழ்குழாய் கிணற்றில் சின்டெக்ஸ் டேங்க் அமைத்தல், வார்டு எண்.30 பஜனை கோவில் 2 வது வீதியில் புதிய ஆழ்குழாய் கிணறு அமைத்து சிறுமின்விசை பம்ப் அமைத்து தண்ணீர் வசதி செய்தல், வார்டு எண்.2 ராமர் எக்ஸ்டன்சன் MCC அருகில் ஆழ்குழாய் கிணறு அமைத்து சிறுமின் விசை பம்ப் அமைத்து தண்ணீர் வசதி செய்தல் , வார்டு எண்.10 சாய் அபிராமி நகர் பகுதியில் ஆழ்குழாய் கிணறு அமைத்து சிறுமின்விசை பம்ப் அமைத்தல் மற்றும் வார்டு எண்.1 கிருஷ்ணா நகர் பகுதியில் ஆழ்குழாய் கிணறு அமைத்து சிறுமின்விசை பம்ப் அமைத்தல் | ரூ.12.50 |

| | | |
|---|---|---|
| 2. | வார்டு எண்.13 வாய்க்கால் வீதி , வார்டு எண்.26 சீத்தாலட்சுமிபுரம் மற்றும் வார்டு எண்.2 ஜெயராமன் எக்ஸ்டன்சன் வார்டு எண்.22 ஏரி மாரியம்மன் கோவில் வீதி உள்ள ஆழ்குழாய் கை பம்புகளை சிறு மின் விசை பம்பாக மாற்றம் செய்து குழாய் நீட்டிப்பு செய்தல் | ரூ.8.00 |
| 3. | கோபிசெட்டிபாளையம் நகராட்சிக்கு புதிய 4000 லிட்டர் கொள்ளளவு கொண்ட குடிநீர் டேங்கர் லாரி வாங்குதல் | ரூ.26.50 |
| | மொத்தம் | **ரூ.47.00** |

Untied Grant Rs.62.00 Lakhs

| வ.எண் | பணியின்பெயர் | மதிப்பிட்டு தொகை ரூ.இலட்சத்தில் |
|---|---|---|
| 1. | கோபிசெட்டிபாளையம் நகராட்சி வார்டு எண்.26 சிவசண்முகம் வீதியில் பெண்கள் கழிப்பிடம் கட்டுதல் | ரூ.10.00 |
| 2. | கோபிசெட்டிபாளையம் நகராட்சிக்கு சொந்தமான நகரவை மகளிர் மேல்நிலைப்பள்ளி முருகன்புதூர் , நகராட்சி டவுன் நடுநிலைப்பள்ளி , ஜெயராம் நகராட்சி நடுநிலைப்பள்ளி, நகரவை மேல்நிலைப்பள்ளி மொடச்சூர் , வேங்கம்மையார் உயர்நிலைப்பள்ளி ஆகிய பள்ளிகளில் நாப்கின் incinerator வாங்கி பொருத்தும் பணி | ரூ.4.00 |
| 3. | கோபிசெட்டிபாளையம் நகராட்சி வார்டு எண்.10 ஆஞ்சிநேயா நகரில் சிறுபாலம் மற்றும் மழைநீர் வடிகால் கட்டும் பணி | ரூ.6.00 |

| **வ.எண்** | **பணியின்பெயர்** | **மதிப்பிட்டு தொகை ரூ.இலட்சத்தில்** |
|---|---|---|
| 4. | வார்டு எண்.24 அன்பு நகர் பகுதியில் சிறுபாலம் அமைத்தல் மற்றும் வார்டு எண்.27 வேங்கம்மையார் பள்ளி அருகில் சிறுபாலம் அமைத்தல் வார்டு எண்.8 மங்கம்மா வீதியில் சிறுபாலம் அமைத்தல் , வார்டு எண்.7 கருமாயா வீதியில் சிறுபாலம் மற்றும் மழைநீர் வடிகால் கட்டுதல் | ரூ.8.50 |
| 5. | வார்டு எண்.17 கமலா ரைஸ் மில் மெயின் வீதி அரசமரம் அருகில் ) , வார்டு எண்.4 விவேகானந்தர் 2 மற்றும் 4 வது வீதி சந்திப்பு, வார்டு எண்.27 சீத்தாலட்சுமிபுரம் 6 வது வீதி (கோதை மளிகை அருகில் ) , வார்டு எண்.2 காளியண்ணன் எக்ஸ்டன்சன் (முருகன் பட்டறை ) அருகில் ஆகிய பகுதிகளில் உள்ள ஆழ்குழாய் கை பம்புகளை சிறு மின் விசை பம்பாக மாற்றம் செய்து தண்ணீர் வசதி செய்தல் மற்றும் வார்டு எண்.30. செங்கேட்டையன் காலணி 6 வது வீதி (அருணாசலம் நகர் ) மேற்கு பகுதியில் புதிய | ரூ.10.00 |

| | | |
|---|---|---|
| | ஆழ்துளை கிணறு அமைத்து சிறுமின்விசை பம்ப் அமைத்தல் | |
| 6. | கோபிசெட்டிபாளையம் நகராட்சிக்குட்பட்ட 30 வார்டுகளிலும் புதிதாக அமைக்கப்பட்ட சாலைகள் போக மீதம் உள்ள சாலைகளை சீரமைக்கும் பணி (Patch work ) மற்றும் வேகத்தடை அமைத்தல் | ரூ9.50 |
| 7. | இந்நகராட்சி பொது சுதாரப்பிரிவிற்குரிய Battery Operator Vehicle 12 எண்ணம் பழுது நீக்கம் செய்தல் | ரூ.9.50 |
| 8. | வார்டு எண்.11 ல் ஐயப்பா நகர் மற்றும் ஆசிரியர் காலணியில் சிறிய ஆர்.சி.சி பாலம் அமைத்தல் | ரூ.1.50 |
| | மொத்தம் | **ரூ.59.00** |

மேற்கண்டுள்ள பணிகளை 15th CFC 2022–2023 ன் கீழ் நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் அனுமதி பெற்று இந்நகராட்சியில் செயல்படுத்திட மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :** மன்றம் அனுமதி வழங்கலாம் .

**அனுமதிக்கப்பட்டது மன்றத்தீர்மான எண்.192**

53. கோபிசெட்டிபாளையம் நகராட்சி வார்டு எண்.28, முத்து நகர் பகுதியில் கட்டப்பட்டு வரும் நகர் நல மையம் (Urban Health and Wellness Center) கட்டிடத்திற்கு தென்புறம் பகுதியில் பொதுமக்கள் தடையின்றி சென்று வர ஒரு R.C.C சிறுபாலம் அமைக்கப்பட வேண்டியுள்ளது. மேற்படி சிறுபாலம் அமைக்க ஆகும் மதிப்பீட்டு தொகை ரூ.1.20 இலட்சம் (ரூபாய் ஒரு இலட்சத்து இருபதாயிரம் மட்டும்) மேற்படி பணியினை மேற்கொள்ளவும் செலவினத்தை நகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :** மன்றம் அனுமதி வழங்கலாம் .

**அனுமதிக்கப்பட்டது மன்றத்தீர்மான எண்.193**

54. கோபிசெட்டிபாளையம் நகராட்சியில் நமக்கு நாமே திட்டம் (NNT) 2022–23 –ன் கீழ் கீழ்கண்டுள்ள பணிகளை மேற்கொள்வதற்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

| **வ. எண்** | **பணியின் பெயர்** | **மதிப்பீட்டுத் தொகை (இலட்சம்)** | **பொதுமக்களின் பங்களிப்புத் தொகை** |
|---|---|---|---|
| 1 | வார்டு எண்.23 ராம் நகர் பூங்காவிற்கு நடைபாதை மற்றும் சிறிய விளையாட்டு பொருட்கள் நிறுவுதல் | 6.00 | 2.00 |
| 2. | வார்டு எண்.10 சாய் அபிராமி நகரில் சி.சி.டி.வி கேமரா பொருத்துதல் | 1.68 | 0.56 |
| 3. | நகராட்சி வேங்கம்மையார் உயர்நிலைப்பள்ளிக்கு SHARP Printer , Copier, Colour Scanner வாங்குதல் | 0.68 | 0.23 |
| 4. | வார்டு எண்.25 .திருவிக 4 வது வீதியில் உள்ள நகராட்சிக்கு சொந்தமான உள்விளையாட்டு அரங்கத்திற்கு செயற்கை புல் தரை அமைத்தல்.(Synthetic Mat) (Ts.No.92/A , 93B 94A, 94B, 101A) | 2.00 | 0.67 |
| 5. | வார்டு எண்.24 பிருந்தான் கார்டன் பகுதியில் பூங்கா அமைத்தல் | 6.00 | 2.00 |

| | | | |
|---|---|---|---|
| 6. | வார்டு எண்.10.ல.கள்ளிப்பட்டி வீதியில் புதிதாக 12mm உயரம் 150 watts LED Fitting சிறிய உயர் மின் கோபுர விளக்கு அமைத்தல் | 4.15 | 1.50 |
| 7. | வார்டு எண்.12 நகராட்சி அலுவலகம் எதிரில் சிறிய உயர் மின்கோபுர விளக்கு அமைத்தல் (12m Height x 5 LED Fitting 150 watts LED) | 4.15 | 1.50 |
| 8. | வார்டு எண்.22 அன்பு பவன் டிராபிக் சிக்னல் அருகில் சிறிய உயர் மின் கோபுர விளக்கு அமைத்தல் (12m Height x 5 LED Fitting 150 watts LED) | 4.15 | 1.50 |
| 9. | வார்டு எண்.25 தான்தோன்றி அம்மன் கோயில் அருகில் சிறிய உயர் கோபுர மின் விளக்கு அமைத்தல் | 4.15 | 1.50 |
| 10. | வார்டு எண்.16 மற்றும் வார்டு எண்.21 அத்தாணி ரோடு மற்றும் பாரியூர் பிரிவு சாலையில் சிறிய உயர் கோபுர மின் விளக்கு அமைத்தல் | 4.15 | 1.50 |
| 11. | வார்டு எண்.17 மற்றும் வார்டு எண்.20 முத்து வேலப்பன் வீதியில் சிறிய உயர் மின் கோபுர விளக்கு அமைத்தல் | 4.15 | 1.50 |
| 12. | வார்டு எண்.15 பஜார் வீதியில் (இந்திரா சில்க்ஸ் அருகில்) சிறிய உயர் கோபுர மின் விளக்கு அமைத்தல் | 4.15 | 1.50 |
| 13. | வார்டு எண்.8 , வார்டு எண்.2 சந்திப்பு வாய்க்கால் சாலையில் சிறிய (Five Corner) உயர் கோபுர மின் விளக்கு அமைத்தல் | 4.15 | 1.50 |
| 14. | வார்டு எண்.16 மேட்டுவலவு சுப்பண்ணன் வீதி சந்திப்பு அருகில் சிறிய உயர் கோபுர மின் விளக்கு அமைத்தல் | 4.15 | 1.50 |
| **மொத்தம்** | | **ரூ.53.71** | **ரூ.18.96** |

மேற்கண்ட பணிகளை பட்டியலில் கண்டுள்ள மதிப்பீடு மற்றும் பொது மக்களின் பங்களிப்பு தொகையுடன் நமக்கு நாமே திட்டம் 2022–2023 – ன் கீழ் செயல்படுத்திட நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் அனுமதி பெற்று மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :** மன்றம் அனுமதி வழங்கலாம்
**அனுமதிக்கப்பட்டது மன்றத்தீர்மான எண்.194**

(ஒப்பம்) – என்.ஆர்.நாகராஜ்
தலைவர்
கோபிசெட்டிபாளையம் நகராட்சி

// உண்மை நகல் உத்திரவு படி//

ஆணையாளர்
கோபிசெட்டிபாளையம் நகராட்சி